அவர்களை உங்களுக்குத் தெரிந்திருக்காது. என் வாழ்க்கையில் 50 ஆண்டுக்காலம் நானே தெரிந்து கொள்ளவில்லை. ஆனால், வாழ்க்கையின் நிஜத்தை இதுமாற்றிவிட்டது. எனவே, தயவு செய்து இயேசுவின் இந்தப் போதனைகளை மிகச் சாதாரணமானவையாக எடுத்துக்கொண்டுவிடாதீர்கள்.

*விவிலியம் மாத்யூ : 10:34* - பூமியின் மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள். சமாதானத்தையல்ல; பட்டயத்தையே அனுப்பவந்தேன்.

இயேசுவின் இந்த வார்த்தைகள் சிறு குழந்தைக்குக்கூடத். தெளிவாகப் புரியும். ஆனால், உங்களுக்குப் போதிக்கப் பட்டிருப்பதென்ன? அன்பையும் அமைதியையும் கொண்டுவரவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார் என்பதே.

## *சந்தை விற்பனைக்கான முத்திரை இயேசு*

இயேசுவின் உருவை அன்பும் அமைதியும் தவழ்வதுபோல் அவர்கள் ஏன் விளம்பரப்படுத்துகிறார்கள்? அவர்களைப்பொறுத்தவரை, இயேசு என்பவர் சந்தை விற்பனைக்குத் தேவையானவொருந்திரை இந்த முத்திரையின் செல்வாக்கைத், தொடர்ந்து மேம்படுத்துவதால், அவர்களுடைய பைகள் ஒருபோதும் காலியாயிருப்பதில்லை. 'போப்மார், புனிதர்கள்....' என்ற நூலில் இந்த வணிகத்தொழில் முறையைப் பற்றி விவரித்திருக்கிறோம்.

## *புனையப்பட்ட அந்த விளக்கங்கள்*

நம் உள்மனத்துத் தீமைகளை அழிக்க, நமது அதர்ம மனப்பாங்குகளுடன் போரிட அவர் பட்டயத்தைக் குறிப்பிட்டதாகத், தயவு செய்து உங்களையே ஏமாற்றிக் கொள்ளாதீர்கள். அப்படிப்பட்டவொரு தத்துவ நிலைக்கு உயர்ந்திருப்பவையல்ல அவை என்பதை விவிலியத்தை நீங்களே படிக்கத் தொடங்கியபோதுதான் உணர்வீர்கள். உங்கள் ஆசான்களையும் போதகர்களையும் நம்புவதைச் சிறிது நிறுத்தித், திறந்த மனதோடு விஷயங்களைச் சரிபார்க்கத் தொடங்குங்கள்.

*விவிலியம் லூக்: 12:51* - நான் பூமியிலே சமாதானத்தை உண்டாக்க வந்தேன் என்று நினைக்கிறீர்களோ? சமாதானத்தையல்ல; பிரிவினையையே உண்டாக்கவந்தேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

## *குடும்பத்தைக் கந்தலாகப் பிரிப்பது பற்றி இயேசு*

'குடும்பங்களைப் பிரிக்கவே நான் வந்தேன்,' என்று 'இயேசு சொன்னார்' என்பதை, அவருடைய முக்கியச் சீடரான புனிதத் தாமஸ் உறுதிசெய்கிறார்.

*தாமஸ் சுவிசேஷம் 16* - இயேசு சொன்னார் : உலகில் சமாதானத்தை நான் உண்டாக்க வந்தேன் என்று அநேகமாக மனிதர்கள் எண்ணுகிறார்கள். பூமியில் பிரிவினையைத், தீயைப், பட்டயத்தைப், போரை உண்டாக்கவே நான் வந்ததை அவர்கள் அறியவில்லை. ஐந்துபேர் ஒரு குடும்பத்திலிருந்தால், மூவருக்கெதிராக இருவரையும் இருவருக்கெதிராக மூவரையும், தந்தைக்கெதிராக மகனையும், மகனுக்கெதிராகத் தந்தையையும் ஆக்குவேன், அவர்கள் தனியாட்களாகி விடுவார்கள்.

இயேசு இவ்வாறு கூறியதற்கு ஒன்றல்ல, மூன்று சாட்சிகளிருப்பதைக் காண்கிறோம். இதற்குமேலும் இயேசுவின் எண்ணத்தில் உங்களுக்குச் சந்தேகமெதுவும் இருக்கக்கூடுமா? அவருடைய வார்த்தைகள் தெளிவாகவும், புரியும்படியாகவும்தானே உள்ளன?

விவிலியத்து இயேசுவும் உண்மையான இயேசுவும் வேறானவர்களென்று, தயவு செய்து, இயேசுவின் பொருட்டுத் தடுமாறிவிடாதீர்கள். உலகக்கண்ணோட்டத்தில் அவர்கள் ஒருவரேயா அல்லது வேறானவர்களா என்ற அக்கறையில்லை. கிறித்துவ விவிலியத்தின் இயேசுவை உலகம் நம்புகிறது. உலகம் நம்புவதுதான் இங்கு முக்கிய விஷயம். காரணம், உலகத்தின் நம்புகிற தன்மையே, நம்புவோரின் நிஜவாழ்க்கை நடவடிக்கைகளை வடிவமைக்கிறது. இவ்வித நடவடிக்கைகள், வேறு மதங்களை நம்புவோரைப் பாதிக்கின்றன.

இயேசுவின் வார்த்தைகளை அவருடைய முக்கியச் சீடரான புனிதத்தாமஸ் பதிவு செய்திருப்பது போலவே மற்றொரு முக்கியச் சீடர், புனித மாத்யூவும் உறுதி செய்கிறார் விவிலியம் *மாத்யூ 10 : 35-36* எப்படியெனில் மகனுக்கும் தகப்பனுக்கும் மகளுக்கும் தாய்க்கும் மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினையுண்டாக்க வந்தேன், ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே

## *மறு உறுதி செய்கிறார் புனித லூக்*

*விவிலியம் லூக் 12:52-53* - எப்படியெனில் இது முதல் ஒரே வீட்டிலே ஐந்துபேர் பிரிந்திருப்பார்கள், இரண்டுபேருக்கு விரோதமாய் மூன்று பேரும், மூன்று பேருக்கு விரோதமாய் இரண்டு பேரும் பிரிந்திருப்பார்கள். தகப்பன் மகனுக்கும் மகன் தகப்பனுக்கும் தாய் மகளுக்கும் மகள் தாய்க்கும் மாமி மருமகளுக்கும், மருமகள் மாமிக்கும் விரோதமாய்ப் பிரிந்திருப்பார்கள் என்றார்.

புனிதத்தாமஸ் பதிவு செய்துள்ள இயேசுவின் போதனைகள் தாமஸ்சுவி.56: இயேசு சொன்னார். தன்தகப்பனையும் தாயையும் வெறுக்காதவன் என் சீஷனாயிருக்கமுடியாது. தன் சகோதரர்களையும் சகோதரிகளையும் வெறுக்காதவன், என்னைப் போல் தன் சிலுவையைச் சுமக்காதவன் எனக்குப் பொருட்டாக மாட்டான்

## *இதைப் புனித லூக் உறுதி செய்கிறார்*

*விவிலியம் லூக் 14:26* - யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன்தகப்பனையும், தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன்ஜீவனையும்

வெறுக்காவிட்டால், எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான். தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப்பின் செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.

## *இயேசுவின் கனவு நனவாயிற்று*

உண்மையில், எங்கும் சண்டைகளைக் காண்கிறோம்; எங்கும் சிதறிவிட்ட குடும்பங்களைக் காண்கிறோம் இந்தப்பூமியில் இயேசு வந்ததிலிருந்து 2000 ஆண்டுகளில் உலகத்துக்கு நேர்ந்தது என்ன? விளம்பரப்படுத்தப்படுவதைப்போல் அதுவொரு வரமா? அல்லது, உண்மையில் அது மனித வர்க்கத்துக்கான சாயமா? இதற்கான விடையை நீங்களே தேடவேண்டும்; நான் வழியை மட்டுமே காட்ட முடியும்?

## *இன்று உங்களைச் சுற்றிலும் அமைதிபற்றி அவ்வளவு பேச்சு ஏன்?*

மனித இனம் சுவாசத்துக்காக இரைத்துக்கொண்டிருப்பது போல் உணர முடிகிறதா, கடந்த 2000 ஆண்டுகளாக எங்கும் போரினால் திக்குமுக்காடுவதைப் போல்?

சில சமயங்களில் யூதர்களும் கிறித்தவர்களும், சில சமயங்களில் கிறித்தவர்களும் முஸ்லீம்களும், இம்மூவருக்கிடையே படுகொலைக்களரி, சுழல் முறையில் தொடர்ந்துகொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. சமயப்போர்கள், ஜெஹாதுகள் தொடர்பான குருதி தோய்ந்த ஐரோப்பிய வரலாற்றைப் புரட்டிப்பாருங்கள்; பல ஆண்டுகளாகப் பேரூட்டில் நடந்ததென்ன வென்பதைப் பாருங்கள்; பாலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்குமிடையே என்ன நடக்கிறதென்பதைப் பாருங்கள், அவற்றையெல்லாமல் ஒப்பிட்டுக் காணும்போது, பாரத தேசத்தில், இந்து-முஸ்லீம்களுக்கிடையே நடப்பது கடலைப்பயறு அளவுதான்

## *கிறித்துவ வட்டங்களில் அன்பைப்பற்றி அத்தனைப் பேச்சிருப்பது ஏன் என்பது உங்களுக்குத் தெரிகிறதா? அவர்கள் எதை மறைக்க முயலுகிறார்கள்?*

எந்நேரமும் அன்பு பற்றிப்பேசியவாறு கிறித்துவச்சமயப் பரப்பாளர்கள், உலகெங்கிலுள்ள சாதாரண மக்களைத் தொடர்ந்து ஏமாற்றி வருவதோடு, இவ்விதப் போர்களும் வன்மமும் கிறித்துவத்தின் மற்றும் அதன் ரட்சகரான இயேசுகிறிஸ்துவின் வெகுமதியென்ற அடிப்படை உண்மையிலிருந்து, மக்களின் கவனத்தை வேறுபுறம் திருப்புகிறார்கள்.

தற்காலத்தில், எங்கும் இயேசுகிற்ஸ்து சமாதானப்புறாவாக, ஏன் சித்தரிக்கப்படுகிறார்? இயேசுவின் கனவு, சந்தடியின்றியும், கண்டு கொள்ளப்படாதவாறும் நனவாகிக் கொண்டிருப்பதிலிருந்து மக்களைத் திசை திருப்பவா? காரண-காரிய உறவிலிருந்து கவனத்தை வேறு புறம் திருப்பும் சாமர்த்தியமான தொழில் முறையா? இயேசுவின் கனவை எச்சரிக்கையாகப் போர்த்திவைத்தல்-காரணம்; இரண்டாயிரம் ஆண்டுகளாக நம்மைச் சுற்றிலும் நடந்து வருபவை-காரியம்.

உங்களைச் சுற்றிலும் உடைந்த குடும்பங்களைக் காண்பது ஏன்? அது, இயேசுவின் கனவுதான்! உலகெங்குமுள்ள கிறித்தவர்களின் ஒரே கடமை-தம் எஜமானரின் கனவைப் பூர்த்தி செய்வது.

கிறித்துவ உலகில் மட்டுமே அவர்கள் குடும்பமென்ற அமைப்பை அழிக்கவில்லை; பாரத தேசத்தில் கிறித்துவச் சமயப்பரப்பின் கல்வித்திட்டம் 1835 இல் செயல்முற்றுவிக்கப்பட்டபின், 170 ஆண்டுகளுக்குள்ளாக, அவற்றின் சிறகுகள் விரிக்கப்பட்டு இந்துக் குடும்ப அமைப்பையும் அழிக்கத் தொடங்கின. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப், பாரத தேசத்தில், நிலையானதும் பயனுள்ளதுமான கூட்டுக்குடும்ப அமைப்பிருந்து வந்தது; ஆனால், கிறித்துவக் கல்வியாளர்கள் காட்சியில் தோன்றியதும், அவர்கள் ஆங்கிலக்கல்வி பயின்ற இந்துக்களின் சிந்தனைத்திறத்தில் தாக்கமுண்டாக்கி, மூல பாட்டையிலிருந்து அவர்கள் விலக, நுண்ணயமாக ஊக்குவித்தார்கள்.

கூட்டுக்குடும்பத்தை அவர்கள் கூறாக்கி தனிக்குடும்பத்தை வளர்த்தார்கள். இது பின்னர், உடைந்த குடும்ப அமைப்பு, தேவையான உணர்ச்சிபூர்வமான ஆதரவு முறையைத் தரவில்லையென்ற வாதமூலக்கூற்றின் பேரில், இந்த இடைவெளியை உளமருத்துவத் தினால் மட்டுமே நிரப்பமுடியுமென்று, உளமருத்துவர்களின் ஆதாய மிகுதியான வியாபாரத்துக்கு வழிவகுத்தது.

குடும்பத்தைக் கந்தலாக்கி அழிப்பதென்பது இயேசு கிறிஸ்துவின் மிகப்பெரும் நன்கொடை என்பதை மனித இனம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

## *இயேசு!*

*இயேசு நமைச்சலையும் ஆச்சரியத்தையும் வெளிப்படுத்தும் தெறுமொழி (ஆக்ஸ். அகராதி. ப.981)*

இதனால்தான் மக்கள் <u>அவருடைய</u> பெயரை இந்த முறையில் உபயோகிக்கத் தொடங்கினார்களோ? அறிய ஆர்வமெனக்கு!

இயேசுவின் போதனைகளிலுள்ள மையக்கருத்து இயேசுவின் உண்மையான முகத்தைக் காட்டினால், மக்கள் தம்மைத்தூக்கியெறிந்துவிடுவார்களென்பது கிறித்துவச்சமயம் போதகர்களுக்குத் தெரியும். இயேசு மற்றும் மோஸேயின் போதனைகளின் உண்மையான தன்மை உலகத்துக்குத் தெரிந்தால், தம்மை உதைத்துத் தள்ளுவார்களென்பது கிறித்துவச் சமயப் பரப்பாளர்களுக்குத் தெரியும். ஆகையால், கிறித்துவத்தின் உண்மை முகமாற்றச் செய்கையைத் தகவல் தொடர்புச் சாதனங்களின் செயற்பரப்பில் தொடர்ந்து நடைபெறுவதற்கான விளம்பரச் செயற்பாட்டுக்காக, வேறெந்த அமைப்பாண்மையையும் இணை கூறமுடியாதவாறு ஏராளமான அளவில் பணம் சிலவழிக்கப்படுகிறது.

## *யூதர்களுக்கும் கிறித்துவர்களுக்குமிடையேயான நேசித்தல் - வெறுத்தலெனும் உறவு பழைய ஏற்பாட்டின் மூலம் கடவுள் பேசுகிறார்*

## *புதிய ஏற்பாட்டின் மூலம் கடவுளின் குமாரன் பேசுகிறார். இருவருமே 'வெறுத்தல்' என்பதையே பேசுகிறார்கள்*

தூண்டப்பெறும் மெய்க்கருத்து வெறுத்தலாதலால், அவர்கள் பிறரை மட்டுமல்லாது, தம்மில் ஒருவருக்கொருவரையே வெறுக்கிறார்கள்.

தம்மை யூதர்களாகக் கூறிக்கொள்வோர், அவர்களுடைய கடவுளைப் பின்பற்றுகிறார்கள்.

தம்மைக் கிறித்தவராகக் கூறிக்கொள்வோர், கடவுளின் குமாரனைப் பின்பற்றுகிறார்கள்.

அவர்களால் வெறுக்காமல் வாழமுடியாது. அவர்களுக்கு வெறுக்க எவருமில்லாதிருந்தால், தம்மையே ஒருவருக்கொருவர் வெறுக்கிறார்கள்.

நாஜிகள் கடவுளின் குமாரனைப்பின்பற்றியவர்கள். யூதர்கள் கடவுளைப் பின்பற்றியவர்கள். அதனால் நாஜிகள் யூதர்களைக்கொன்றார்கள்

கடவுளின்குமாரனைப்பின்பற்றுவோரின் தலையாய சமயத் தலைவர் போப். யூதர்களைக் கொன்றபோது, கிறித்தவர்களை அவர் ஆசீர்வதித்தார்.

நாஜிகளுக்கும் தலையாய சமயத்தலைவராயிருப்பதால் யூதர்களிடமிருந்து நாஜிகள் சூறையாடிய தங்கத்தில் போப் பங்கு கோரினார்.

"1944இல் மட்டும், வாடிகனுக்கு நாஜிகள் அளித்த நன்கொடை நூறு மிலியன் டாலர்களுக்கும் (இன்றைய மதிப்பில் நூற்றைம்பது கோடி) அதிகமானது. இரண்டாவது உலகப்பெரும் போரின்போது, ஐரோப்பிய யூதர்களிடமிருந்து நாஜிகள் கொள்ளையடித்த தங்கத்தில் பெரும் பகுதியையும் வாடிகன் சாமர்த்தியமாகப் பெற்றது. இது தற்போது ஐரோப்பாவில் பெரிய அவதூறாகியிருக்கிறது வாடிகன் மட்டும், நாஜிகளுடன் அதன் இணைவையும், ஐரோப்பிய யூதர்களிடம் நடத்தப்பட்ட கொள்ளையில், தன் பங்காற்றலையும் ரகசியப்படுத்திக் கொண்டது." A Hindu View of the World, N.S. ராஜாராம் ப.134

## *ஆனால் பிறரை வெறுக்கவேண்டியபோது அவர்கள் ஒருவரையொருவர் நேசிக்கிறார்கள்*

கிறித்தவ ஹிட்லரைப்பற்றி யூதர்கள் ஏராளமான ஹாலிவுட் திரைப்படங்களைத் தயாரித்தார்கள். சாய்ந்துள்ள ஸ்வஸ்திகச் சின்னத்தை அவர்கள் எங்கு பார்த்தாலும் வைத்தார்கள். இதன் விளைவு: சந்தேகப்படாத ஐரோப்பிய மற்றும் அமெரிக்கப் பொதுமக்கள், நாஜியின் வெறுப்பானது, இந்து வெறுப்பின் விளைபொருளேயென்று நம்பவைக்கப்பட்டார்கள். ஆனால் சாய்வுற்ற ஸ்வஸ்திகச்சின்னம், இந்து மதத்தில் தீய சகுனமாகக் கருதப்படுவதை மட்டும் அந்த மக்களுக்குத் தெரிவிக்கவில்லை. இந்துக்களின் ஸ்வஸ்திகம் நேராகவிருப்பதாகும். மூடிமறைக்கும் கலையில் அவர்கள் நன்கு தேர்ந்துள்ளனர்.

# *இஸ்லாம்*

யூதமதமாக ஆரம்பித்தது எதுவோ, அது கிறித்துவத்துக்கு மொழிபெயர்க்கப்பட்டுப், பின்னர் இஸ்லாமில் தன் உக்கிரமான வெளிப்பாட்டைக் கொண்டது. விதையொன்று, புலால் உண்ணும் மூன்று செடிகள்!

*ஸ்வாமி விவேகானந்தர்* - "உலகளாவிய சகோதரத்துவத்தைப் பற்றி முஹம்மதியர்கள் பேசுகிறார்களெனினும், உண்மையில் வெளிப்படுவது என்ன? முஹம்மதியனாகஇல்லாதஎவனும் சகோதரத்துவத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டான்; பெரும்பாலும் அவனுடைய கழுத்து அறுக்கப்படும்" Hindu Voice Aug 2004 p 25

## *யூதம், கிறித்துவம், இஸ்லாம் மூன்றும் ஒரே உடன் பிறப்பாண்மையின் பகுதி - நபி முஹம்மதுவே இதை உறுதிப்படுத்துகிறார்*

"நம்பிக்கையுள்ளோரிடமிருந்து அவர்களின் உயிர்களையும் செல்வத்தையும் அல்லாஹ் வாங்கியிருக்கிறார். ஏனெனில், பேரின்பத்தோட்டம் அவர்களுடையதாகும். அல்லாஹ்வின் வழியில் அவர்கள் போரிட்டு வீழ்த்துவார்கள்; வீழ்த்தப்படுவார்கள். தோராவிலும் சுவிசேஷத்திலும், குரானிலும் ஆண்டவரைப்பிணைத்திருப்பது சத்தியம். அவருடைய உடன்பாட்டு வாசகத்தை அல்லாவைத் தவிரச் சிறப்பாக யார் நிறைவேற்ற முடியும்? நீங்கள் செய்த பேரத்தில் மகிழுங்கள்; ஏனெனில் அது மிக உச்சமான வெற்றி" *குரான் மஜீத் ப. 388 ஸுரா 9 அத்-தோபா ஆயத் 111*

*ஆக்ஸ்ஃபோர்டு அகராதி - தோரா* - யூத மதத்தில் மோஸேக்கு வெளிப்படுத்தப்பட்டு எபிரேய மறைகளின் முதல் ஐந்து நூற்பகுதிகளில் பதிவு செய்யப்பட்டுள்ள கடவுளின் சட்டம். (ப.1955) - *சுவிசேஷம்* - 1) கிறிஸ்துவின் போதனைகள் அல்லது வெளிப்பாடு; 2) புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு நூற்பகுதிகளில் (புனித மாத்யூ புனிதமார்க், புனிதலூக் மற்றும் புனித ஜான் ஆகியோரால் இயற்றப்பட்டதாகக் கூறப்படுபவை) உள்ள இயேசுவின் வாழ்க்கை மற்றும் போதனைகளின் பதிவு (ப.792)

எனவே, இங்கு நாம் காண்பது கடவுள் அல்லது அல்லாஹ், யூதர்களின் தோராவிலும், கிறித்துவச்சுவிசேஷத்திலும், முஸ்லீம் குரானிலும் மனித இனத்துக்கு வாக்குறுதியளித்துள்ளார் என்பதாகும். இந்தத் தொடர்பைக் கவனிப்பீர்களென்று நம்புகிறேன். கடைசியில் வந்தவராதலால், முஹம்மது, இந்தத் தொடர்பைத் தெளிவுபடக் கூறவேண்டியவரானார்.

*ஆக்ஸ்ஃபோர்டு அகராதி - முஹம்மது* (சுமார் 570-632) அரபியத்தீர்க்கதரிசியும் இஸ்லாமை நிறுவியவருமாவார்; (கூடுதலான செய்தி) சுமார் 610இல், மெக்காவில் வெளிப்பாடுகளின் தொடரில் முதலாவதைப் பெற்றார்; இது குரானாக, இஸ்லாமின் கோட்பாடு மற்றும் சட்டத்துறையின் ஆதாரமாயிற்று. அவருடைய போதனைக்கு எதிர்ப்பு காரணமாக, அவரும்

அவருடைய ஆதரவாளர்களின் சிறுகுழுவும், 622இல் மெதீனாவுக்கு ஓடுமாறு பலவந்தப்படுத்தப்பட்டார்கள். மெக்கா நகரத்தாரோடு தொடர்ச்சியாகப் பல போர்களில் தம் ஆதரவாளருக்குத் தலைமை தாங்கினார். 630இல் மெக்கா சரணடைந்து, இவருடைய மரணகாலத்திற்குள் அரேபியாவின் பெரும்பகுதியை முஹம்மது ஒன்று கூட்டினார். (ப.1213)

## யூதக்-கிறித்துவத்தின் உபவிளைபொருள் இஸ்லாம்

*இஸ்லாமுக்கான தோற்றுவாய் இரண்டு - குரானும் ஹதீஸும் -* "இஸ்லாமின் தோற்று வாய் இரண்டு - குரானும் ஹதீஸும் (உரைகளும் மரபுகளும்) வழக்கமாக இதை ஸுன்னா (வழக்கங்கள்) என்பர். இவ்விரண்டுமே மையமாக முஹம்மதைக் கொண்டவை. நபியின் 'வெளிப்பாடுகள்' (வஹீ) மற்றும் ஹதீஸ்-அவர் செய்தவை அனைத்தும் அல்லது கூறியவை அல்லது ஆணையிட்டவை, தடுத்தவை, தடுக்காதவை, அங்கீகரித்தவை, அங்கீகரிக்காதவை- ஆகியவற்றைக் குரான் கொண்டுள்ளது" (ருனேநசளவயனேைபே ஐளடயஅ வாசடிரபா ழயனளை)

*ஆக்ஸ்ஃபோர்டு அகராதி - கொரான் (குரான்) -* இஸ்லாமியப்புனிதமறை; தலைமைத் தேவதூதனாகிய காப்ரியேல் மூலமாக முஹம்மதுக்கு அளிக்கப்பட்ட கடவுளின் வார்த்தையென்று நம்பப்படுவது; அரபிய மொழியில் எழுதப்பெற்றுள்ளது; வெவ்வேறு நீளமுடையதாக, ஸூராக்கள் எனப்படும் 114 பிரிவுகளைக் குரான் கொண்டிருக்கிறது; முதல் ஸூரா, வினைமுறைத்தோத்திரத்தின் பகுதி எனப்படுகிறது. கோட்பாடு, சமுதாய அமைப்பு, சட்டத்துறை ஆகியவை உள்ளிட்ட மனித வாழ்வின் எல்லா அம்சங்களையும் அது சுட்டியதாயிருக்கிறது. (ப.1019) - *காப்ரியேல் (விவிலியத்தில்)* கன்னிமேரிக்கு இயேசுவின் பிறப்பைப்பற்றிமுன் கூட்டியே தெரிவித்த தலைமைத் தேவதூன் (லூக். 1:26-38) ஞான ஸ்நானன் ஜானின் தந்தையான ஜகரியஸுக்கும் டானியெலுக்கும் காட்சி தந்தவர்; *(இஸ்லாமில்)* நபிமுஹம்மதுக்குக் குரானை வெளிப்படுத்திய தலைமைத்தேவதூதன். (ப.749).

ஆக. இதிலிருந்து நாம் காண்பதென்னவென்றால், மேரியிடம் அவள் இயேசுவைப்பெறுவாளென்று தெரிவித்த அதே முக்கியத்தேவதூதன், காப்ரியேல், சில நூற்றாண்டுகளுக்குப்பின் முஹம்மதிடம் குரானைத் தெரிவித்தார் என்பதே.

*ஆக்ஸ்ஃபோர்டு அகராதி - ஹதீத் (ஹதீஸ்) -* முஹம்மதின் தினசரி நடவடிக்கைகள் (ஸுன்னா) பற்றிய விவரங்களும் அவர் கூறியவையுமான மரபுகளின் தொகுப்பு குரான் நீங்கலாக முஸ்லீம்களுக்கு வழிகாட்டும் முக்கியமூலச் செய்திகளாக அமைந்தவை இவை (ப.824) - *ஸுன்னா :* முஹம்மதின் வார்த்தைகள் மற்றும் நடவடிக்கைகளைக் கொண்ட மரபின் வழியான முஸ்லீம் சட்டத்தின் பகுதி; முஸ்லீம்களால் (குரானோடுசேர்த்து) அதிகாரபூர்வமானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது. (ப.1861) - *ஸூரா (ஸூராஹ்)* - குரானில் ஒரு அத்தியாயம் அல்லது பகுதி (ப.1866)

## *முஸ்லீமுக்குத் தேர்வுரிமை இல்லை*

ஒரு கிறித்தவன் பூமியில் வாழும்வரை கடவுளின் சட்டங்களால் பிணைக்கப்பட்டிருப்பதைப் போலத்தான்.

“குரானில் அல்லாஹ் கூறியவற்றின் பிரத்தியட்சத்தோற்றம் முஹம்மதின் வாழ்க்கை. தெய்வீகக்கருத்தைக் கடவுள் தர, அதன் உயிருள்ள வடிவமானவர் முஹம்மது. குரானின் பிரகாரம், அல்லாவும் அவருடைய திருத்தூதரும் ஒரு விஷயத்தில் முடிவு செய்தபின், அவ்விஷயத்தில் நம்பிக்கையாளனுக்குத் தேர்வுரிமை கிடையாது.” Understanding Islam through Hadis

“அல்லாவும் அவருடைய திருத்தூதரும் ஒரு விஷயத்தை (நம்பிக்கையாளருக்காக) முடிவு செய்த பின் அவ்விஷயத்தில் நம்பிக்கையுடைய ஆணுக்கும் பெண்ணுக்கும் எவ்விதக்கருத்தைக் கூறவும் உரிமையில்லை. அல்லாவுக்கும் திருத்தூதருக்கும் எதிராகவிருப்பவர் யாராயினும், அவர், வெளிப்படையான தவறினால் நெறிபிறழ்பவராகிறார். *குரான் ஸுரா 33 அல்-அஷாப் ஆயத் 36*

## *தேசத்தில் கலகங்கள் ஏற்படுவது ஏன்?*

உத்தரப்பிரதேசம், ராம்பூரிலுள்ள மக்தபா அல்-ஹஸ்னாத் என்ற மரபு மீறாக்கோட்பாடுடைய முஸ்லீம் அமைப்பாண்மை, அரபி மொழிப்பாடவடிவத்தை, அதற்குப் பக்கத்துப்பத்திகளில் இந்தி மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்புகளோடு குரானை வெளியிட்டது.

“தில்லி, ஹிந்து ரக்ஷா தளம் ‘தேசத்தில் கலகங்கள் நடப்பதேன்’ என்ற தலைப்போடு ஒரு விளம்பரத்தட்டியை வெளியிட்டது. பிற மதங்களைப்பின்பற்றுவோருடன் சண்டையிடுமாறு நம்பிக்கையாளர்களுக்கு (முஸ்லீம்களுக்கு) ஆணையிடும் 24 ஆயத்துகளை அதில் சுட்டி, அந்த ஆயத்துகள் குரானிலிருந்து நீக்கப்படும்வரை, இத்தேசங்களில் கலகங்களைத் தவிர்க்கமுடியாதென்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. குரான் வெளியிடத் தடையிடவேண்டுமென்று விண்ணப்பித்த சந்தன்மல் சோப்ரா, பிரிவு 295 ஏயை எடுத்துக் காட்டியவாறு, அதே பிரிவுகளான, இந்தியக் குற்றவியல் சட்டம் 153 ஏ, 295ஏ பிரிவுகளை முன்வைத்து, ஹிந்து ரக்ஷா தளத்தின் தலைவரும் செயலரும் கைது செய்யப்பட்டார்கள். தில்லியின் நகரக்குற்றவியல் நடுவரான ZS லோஹத் என்பவர்,” 31.7.1986 அன்று தீர்ப்பளித்தார். ‘குரான் மஜீதின் மீதுள்ள மரியாதை ஒரு புறமிருக்க, அந்த ஆயத்துகளை நுண்ணிப் பரிசீலனை செய்தபோது அவை இடர்விளைவிக்கக்கூடியவையாவும், வன்மத்தைக் கற்பிப்பதாயும் இருப்பதோடு, ஒருபுறம் முஹம்மதியர்கள், மறுபுறம் மற்றெல்லா மதத்தினர்-இவ்விருசாராருக்குமிடையே வேற்றுமைகளை உண்டாக்குவதாகக் காணப்படுவதால் குற்றஞ்சாட்டப் பட்டுள்ள இருவரையும் (ஹிந்துரக்ஷா தளத்தின் தலைவர், செயலர்) குற்றமற்றவர்களாக விடுதலை செய்கிறேன்.”Calcutta Quran Petition . X-XI

## *யூதம், கிறித்துவம், இஸ்லாம் ஆகியவற்றின் சிந்தனைச் செயற்பாட்டைப் பாருங்கள். அவை ஒன்றாகவேயுள்ளன. இம்மூன்றையும் இணைக்கும் பொதுவான நூலிழை, இந்துக்களைப் போன்ற விக்கிரஹ*

## *வழிபாட்டாளர்களிடம் அளவற்ற வன்மம் கொள்வதென்பதே. அப்படிப்பட்டவர்களுக்கு அவர்கள் குறிக்கும் மருந்தும் ஒரேவிதமானது*

"நம் வெளிப்பாடுகளை நம்பாதவர்களை நாம் தீக்கு அனுப்புவோம்; அவர்கள் தம் தோல்களைத் தீயில் இழக்கும்போது, வாதையைச் சுவைப்பதற்காக புதிய தோல்களைப் பரிவர்த்தனையாகத் தருவோம். அல்லாவே மேலானவர், அறிவுடையவர்." *குரான் ஸுரா 4-அன்-னிஸா; ஆயத் 56*

"அவனைப்பிடித்துக்கட்டு; அவனை நரகத்தீயில் சுட்டெரி; பின்பு முப்பது முழ நீளமுள்ள சங்கிலியால் அவனைக்கட்டு. ஏனெனில், மிக உயர்ந்தவரான அல்லாவை அவன் நம்பவில்லை *குரான் ஸுரா 69 அல்-ஹாக்கா ஆயத் 30-33*; "நம்பிக்கையற்றவர்களுக்காகத் தீயினால் ஆன உடைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவர்களுடைய தோல்களையும், வயிற்றினுள்ளே இருப்பவற்றையும் உருக்குமாறு மொழியப்படும். பழுக்கக்காய்ச்சப்பட்ட இரும்பினால் அவர்கள் அடிக்கப்படுவார்கள். - *குரான் - ஸூரா 22 ஆயத் 19-21 அல்-ஹஜ்)* நீங்கள் நம்புகின்ற ஆசிரியர்களும் போதகர்களும் உங்களுக்குக் கூறுவதென்ன?

"விக்கிரஹ வழிபாடு இல்லாமற் போகும் வரை அவர்களோடு சண்டையிடுங்கள்; அல்லாவின் மதம் உச்சமாகும் வரை" *குரான் ஸூரா 2 ஆயத் 193 அல்-பக்ரா*

விக்கிரஹவழிபாடு ஒழிக்கப்பட்டு அவர்கள் முஸ்லீம்களாகும்வரை ஓயாதீர்கள்! முஹம்மதுக்கு அல்லாஹ் கூறுவது இதுதான்.

அல்லாவைப்பற்றியும் முஹம்மதைப் பற்றியும் உங்கள் ஆசிரியரும் போதகரும் உங்களுக்குச் சொல்வதென்னவென்று இப்போது உங்களையே கேட்டுப்பாருங்கள். எந்த அளவுக்கு நீங்கள் அவர்களை நம்பலாம்?

## *நிரந்தரத்துக்கான விதை இங்கே*

*குரான் ஸுரா 8 ஆயத் 39 அல்-அன்ஃபால்* - விக்கிரஹ வழிபாடு இனியில்லாமற்போய், அல்லாவின் மதம் உச்சமாக ஆளும்வரை அவர்களோடு போரிடுங்கள்.

முஸ்லீம்கள், குரானை அல்லாவின் ஆணையாகவும், நபியின் நடவடிக்கைகளை அல்லாவின் நடவடிக்கைகளாகவும் கருதுவதால், அவர்கள் இப்பூமியில் வாழும்வரை வன்மமும், அழித்தலுக்கான வேட்கையும் நிரந்தரமாகக் கொண்டிருக்கவேண்டுமென்பதை இக்கட்டளை தருகிறது. சூழ்நிலைகள் மாறலாம்; சுற்றுச்சூழல் மாற்றியமைக்கப்படலாம்; ஆனால் வன்மம், அழிப்பு என்ற அவர்களுடைய நிகழ்ச்சி நிரல் ஒருபோதும் முடிவுறக்கூடாது. அப்போது முதல் இப்போது வரை, சாரத்தின் விஷயத்தில் எதுவும் மாறவில்லை; காலம், சூழலுக்கேற்ப அவற்றின் தோற்றங்கள் மட்டுமே மாறியுள்ளன.

*குரான் ஸுரா 9 ஆயத் 2-3 அத்-தௌப* - "நம்பிக்கையில்லாதவர்களை அல்லாஹ் தாழ்வுபடுத்துவார். அல்லாவும் அவருடைய திருத்தூதரும் சிலைவழிபாட்டாளனுக்கு எவ்விதக்

கடப்பாடுமுடையவர்கள்அல்ல.... நம்பிக்கையற்றோருக்கு வருந்தத்தக்க தண்டனையைப் பிரகடனம் செய்."

*குரான் ஸுரா 60 ஆயத் 4 அல்-மும்தஹினா* - "உங்களை (விக்கிரஹ வழிபாட்டாளர்களை) நாங்கள் தொடர்பறுக்கிறோம்" நீங்கள் அல்லாஹ் ஒருவரை மட்டுமே நம்பும் வரை, நம்மிடையே பகையும் வன்னமும் ஓங்கியிருக்கும்.

விக்கிரஹங்களை வழிபடுவதை நீங்கள் தொடர்ந்தால், முஸ்லீமாக ஆகாவிட்டால், நீங்கள் எங்கள் பகைவராவதோடு, உங்களிடம் எங்கள் வன்மம் தொடரும்!

செய்தி இது; ஆனால் உங்கள் ஆசான்களும் போதகர்களும், இந்த அச்சுறுத்தலைப்பற்றி அறியாமல் மகிழ்ச்சியுடனிருக்குமாறும், உங்கள் முற்காப்புணர்வைத் தூக்கி எறியுமாறும், காந்தியைப் போல், நாமெல்லோரும் சகோதரர்கள்; நீ என் முதுகில் கத்தியால் குத்து; நான் உன்னிடம் அன்பு பாராட்டிக் கொண்டேயிருப்பேன். என்று சொல்லிக்கொண்டேயிருக்குமாறும் உங்களுக்குக்கூறுகிறார்கள்.

*குரான் ஸுரா 9 ஆயத் 7 அத்-தௌப* - "விக்கிரஹவழிபாட்டாளர்களிடம் அல்லாவுக்கும். அவருடைய திருத்தூதருக்கும் நம்பிக்கை கிடையாது."

அல்லாவுக்கோ, அவருடைய திருத்தூதருக்கோ, விக்கிரஹ வழிபாட்டாளர்களிடம் நம்பிக்கையில்லை. அல்லாவுக்கும் திருத்தூதருக்குமே இயலாதென்னும் போது, ஒரு சாதாரண முஸ்லீமுக்கு, இந்துவைப் போன்ற விக்கிரஹ வழிபாட்டாளனை எவ்வாறு நம்பவியலும்?

*குரான் ஸுரா 9 ஆயத் 39 அல்-தௌ* - "நீ போரிடாவிட்டால், அவர் உன்னைக் கடுமையாகத்தண்டித்து, உன் இடத்துக்கு வேறு மனிதர்களை மாற்றுவார்".

விக்கிரஹ வழிபாட்டாளர்களோடு நீங்கள் சண்டைபோடாவிட்டால் உங்களுக்குப்பதிலாக வேறு ஆட்களை அல்லாஹ் வைத்துவிடுவார்! எனவே, ஒரு முஸ்லீம், விக்கிரஹ வழிபாட்டாளனாகிய இந்துவிடம் போர் செய்ய வேண்டும்; இல்லையேல், அவனுக்கு இஸ்லாமில் இடமில்லை.

*குரான் ஸுரா 2 ஆயத் 216 அல்-பக்றா* - "சண்டையிடுதல், உனக்கு விருப்பமில்லாததாயினும், அது உன் கடப்பாடு ஆகும்."

உனக்குப் பிடிக்கிறதோ, இல்லையோ, ஒரு முஸ்லீம் என்ற முறையில் விக்கிரஹ வழிபாட்டாளனாகிய இந்துவை வெறுத்துக்கொண்டேயிருப்பதோடு,உனக்கியன்றபோது அவனைக்கொல்.

*குரான் ஸுரா 9 ஆயத் 41 அல்-தௌப* - "நிராயுதபாணியாயிருந்தாலும், ஆயுதங்கள் நிறைந்திருந்தாலும், உன் செல்வம் மற்றும் உன் ஆட்களுடன், அல்லாவின் காரணமாக முன்னேறிச் சண்டையிடு."

சண்டையிடுவதற்கான சாதனங்கள் உன்னிடமிருந்தாலும், இல்லாவிட்டாலும், விக்கிரஹ வழிபாட்டை ஒழிக்க நீ சண்டையிட்டேயாகவேண்டும். அப்படிப்பட்ட சண்டை அல்லாவுக்காகவும் அவருடைய

சார்பிலுமாகும். உன்னிடமிருக்கும் வகைதுறை வளங்களோடு நீ சண்டையிடுவதை அல்லாஹ் விரும்புகிறார்.

*குரான் ஸுரா 9 ஆயத் 123 அத்-தௌப - "நம்பிக்கையாளர்களே! உங்களைச் சுற்றிலும் வசிக்கும் நம்பிக்கையில்லாருடன் போரிடுங்கள்; உங்களிடம் கடுமைத்தனமிருப்பதை அவர்கள் காணட்டும்."*

முஸ்லீம்களே! விக்கிரஹ வழிபாட்டாளர்களிடம் கடுமையாக இருந்து, உங்களுக்கருகாமையில் வசிப்போருடன் சண்டையைத் தொடங்குங்கள்; இவ்வாறு அவர்களை ஒழித்துக்கட்டுங்கள்.

*குரான் ஸுரா 66 ஆயத் 9 அத்-தஹ்ரீம்* - "ஓ நபியே! நம்பிக்கையில்லாதார் மற்றும் விஷமிகள் மீது போர் தொடுத்து, அவர்களைக் கடுமையாக நடத்தும்; அவர்களுடைய வீடு நரகமாகவும், அவர்களுடைய விதி தீயதாகவும் ஆகட்டும்."

விக்கிரஹ வழிபாட்டாளர்களுடன் போர் தொடுத்து, அவர்களை நரகத்துக்கு அனுப்புமாறு நபியிடம் அல்லாஹ் தெரிவிக்கிறார். எனவே, முஸ்லீம்களிடம் நபி கேட்பதென்ன? இயல்பாக, அதையேதான். ஆனால், உங்கள் ஆசிரியர்களும் போதகர்களும் உங்களுக்கு எதை, ஏன் சொல்லுகிறார்கள்?

*குரான் ஸுரா 9 ஆயத் 73 அத்-தௌப* - "ஓ நபியே! நம்பிக்கையில்லாதார் மற்றும் விஷமிகள் மீது போர் தொடுத்து, அவர்களிடம் கடுமையாய் இரும்; அவர்களுடைய இறுதிவாசம், துரதிருஷ்டமான வொருபயணத்தின் முடிவாக, நரகம்."

*குரான் ஸுரா 47 ஆயத் 4-15 முஹம்மத்* - "போர்க்களத்தில் நம்பிக்கையில்லாதவர்களை நீங்களே சந்திக்கையில் அவர்களுடைய சிரங்களை வெட்டுங்கள்; அவர்களைத் தோற்கச் செய்கையில், பிடிபடுவோரை திடமாகக் கட்டுங்கள்; பின்பு அவர்களுக்கு விடுதலை கொடுங்கள், அல்லது போர் முடியும் வரை அவர்களிடமிருந்து பிணையப்பணம் பெறுங்கள்; இவ்வாறு நீங்கள் செய்ய வேண்டும். அல்லாஹ் எண்ணியிருந்தால், அவர்களைத் தானே (உம் உதவியின்றி) அழித்திருக்கமுடியும். ஆனால், ஒன்றை மற்றொன்றால் உம்மைச் சோதிக்க அவர் விதித்திருக்கிறார். அல்லாவின் பொருட்டு வீழ்த்தப்படுவோரின் பணிகள் அழிய அவர் இடந்தர மாட்டார். அவர்களுக்கு வழிகாட்டுதலையும், அவர்களுடைய தகுநிலை மேன்மைப்படுத்தப்படுவதையும் அவர் உறுதி கூறுகிறார். அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ள சுவனத்திற்குள் அவர்களை அனுமதிப்பார்."

முஸ்லீம்களாக இல்லாதவர்களின் தலைகளைக்கொய்து, அவர்களை திடமாகக் கட்டிப், பிணையப்பணம் பெற்றுக்கொண்டு அவர்களை விடுதலை செய்யவும். எண்ணியிருந்தால் அல்லாவே அவர்களைக் கொன்றிருக்க முடியுமெனினும், உம்மைச் சோதிக்கவே அவர் விரும்புகிறார். அல்லாவுக்காக உயிர் நீப்போரின் பணிகள் வீணாக; ஏனெனில்; அவர்கள் சொர்க்கத்துக்கு அனுப்பப்படுவார்கள்.

*குரான் ஸுரா 47 ஆயத் 4-15 முஹம்மத்* - "நம்பிக்கையுடையோரே! அல்லாவுக்கு நீங்கள் உதவினால், அவர் உங்களுக்கு உதவி, உங்களை வலுப்படுத்துவார். ஆனால்,

நம்பிக்கையில்லாதவர்கள் நரகத்துக்கு அனுப்பப்படவேண்டும். ஏனெனில் அவர்கள், அவருடைய வெளிப்பாடுகளை எதிர்த்திருக்கிறார்கள்; அவர்களுடைய காரியங்களை அவர் செயல் குலைவிப்பார்.... நம்பிக்கையுடையோரின் ரட்சகர் அல்லாஹ்; நம்பிக்கையில்லாதவர்களுக்கு ரட்சகர் கிடையாது. உண்மைச் சமயத்தைத் தழுவுபவர்களுக்கு அல்லாஹ், பாயும் நீரோடைகளால் ஜலம் இடப்படும் தோட்டங்களில் (சுவர்க்கத்தில்) அனுமதியளிப்பார். நம்பிக்கையில்லாதோர் அவர்களுடைய முழுமகிழ்ச்சியைக் கொள்வதோடு, விலங்குகள் உண்பதைப்போல் உண்பார்கள்; ஆனால் அவர்களுடைய வீடு நரகமாகவிருக்கும்..... அவர்கள் எக்காலத்திலும் நரகத்திலேயே, கொதி நீரைக் குடித்துக்கொண்டு, அவர்களுடைய குடல்களை அது கிழிப்பதாக, வசிப்பார்கள்".

விக்கிரஹ வழிபாட்டாளரைக் கொல்ல அல்லாவுக்கு முஸ்லீம்கள் உதவவேண்டும். இதற்குப்பிரதியாக அவர்களுக்குச் சுவர்க்கத்தின் முடிவற்ற இன்பங்களைத் தருவார். முஸ்லீம்கள் அல்லாதார், நரகத்துக்குச் சென்று அங்கே, தம் குடல்களைக்கிழிப்பதான கொதிநீரை அருந்த வேண்டும்.

## *இயேசுவின் நிரந்தர வெறுத்தொதுக்கல் இப்போது இஸ்லாமில்*

நிரந்தர வெறுத்தொதுக்கல் என்ற கருத்துப்படிவத்தை முஹம்மது, முதன்முறையாக இதை அறிமுகம் செய்வித்த இயேசுவிடமிருந்து இரவல் பெற்றிருக்கிறார். முஸ்லீம்களாக இல்லாதார், எக்காலத்திலும், நரகத்தில்தான் இருக்கவேண்டுமென்று முஹம்மதும் உரிமைகோருகிறார்.

## *அல்லாவின் சுவர்க்கம்*

அல்லாவின் சுவர்க்கம் மிகக் கவர்ச்சியானது. இந்த விக்கிரஹ வழிபாட்டாளர்களைக் கொல்லும்போது, நீங்கள் இறந்து போனால், உங்களுக்குப் புதுப்புது இன்பங்களைத்தர, என்றுமே இளமையோடிருக்கும் ஏராளமான கன்னிப்பெண்கள் அந்தச் சுவர்க்கத்திலுண்டு.

"காலமெல்லாம் நம்பிக்கையாளர்களைக் குறிப்பாகக் கவர்ச்சியூட்டுவது வேறொன்று : சமயத்துக்காக ஜீவித்திருந்த அல்லது மரணமடைந்தவர்களுக்குப் புதுப்புதுவகையான இன்பங்களை அளிப்பதில் அயர்வுறாத, ஒருபோதும் இளமை முதிராத, தம் கவர்ச்சிக்கூறுகளை எப்போதுமிழக்காத அழகான கன்னிப் பெண்களின் கூட்டம் ஆகும். சுவர்க்கம் பற்றிய காமவிகாரம் மற்றும் வஞ்சக்கவர்ச்சியுடைய வர்ணனைகள், குரான் தொடங்கி ஹதீஸ் வரையான இஸ்லாமியக் கோட்பாட்டுத் தொகுதியின் மிகுதியான பகுதிகளில் இடம் பெற்றுள்ளன." Calcutta Quran Petition நூன்முகம்; ப. ix

*குரான் ஸுரா 8 ஆயத் 12 அல்-இன்ஃபால்* - "நம்பிக்கையில்லாதாரின் இதயங்களில் பயங்கரத்தை விளைவிப்பேன்; அவர்களுடைய சிரங்களை வெட்டுங்கள்; அவர்களுடைய ஒவ்வொரு அவயவத்தையும் ஊனமாக்குங்கள்"

முஸ்லீமாக இல்லாதவர்களின் சிரங்களை வெட்டி, அவர்களுடைய ஒரு கைகளையும், இருகால்களையும் நிரந்தர ஊனமாக்கும்படி அல்லாஹ் முஸ்லீம்களுக்கு அறிவுறுத்துகிறார்.

*குரான் ஸுரா 8 ஆயத் 15-18 அல்-அன்ஃபில்* - "அவர்களைக்கொன்றது நீயல்ல; அல்லாதான்; அவர்களை அடித்தது நீயல்ல, அல்லாதான். நம்பிக்கையாளர்களுக்கு மிகுதியான சன்மானங்களைத் தரும்பொருட்டே, அல்லாஹ் அவர்களை அடித்தார்."

விக்கிரஹ வழிபாட்டாளர்களைக் கொல்வதை - அதாவது இந்துக்களைக் கொல்வதைக்-குற்றமாக உணரவேண்டாம்; ஏனெனில் அவர்களைக்கொன்றது நீங்களல்ல; உங்கள் மூலமாக அதைச் செய்தது அல்லாதான். அவர்களைக்கொல்லுவதில் ஒரு ஆயுதமாக அல்லாவுக்கு நீங்கள் இருந்ததால், உங்களுக்குத் தகுந்தவாறு வெகுமதி பெறுவீர்கள்.

*குரான் ஸுரா 48 ஆயத் 29 அல்ஃபத்ஹ்* - "அல்லாவின் திருத்தூதர் முஹம்மது; அவரைப்பின்பற்றுவோர், நம்பிக்கையில்லாதாரிடம் இரக்கமின்றியும், தம்மில் ஒருவருக்கொருவர் கருணையுள்ளவராயும் இருக்கிறார்கள்".

அல்லாவின் திருத்தூதர் முஹம்மது; அவர் வழி நடப்போர், முஸ்லீம்களாக இல்லாதவர்களிடம் இரக்கமின்றியும், முஸ்லீம்களிடம் கருணையுள்ளவர்களாகவுமிருக்கிறார்கள்.

*குரான் ஸுரா 8 ஆயத் 67 அல்-அன்ஃபால்* - "ஒரு நாட்டில் படுகொலை செய்யாதவரை எந்தத் தீர்க்க தரிசியும் கைதிகளைக் கொண்டிருக்கமுடியாது."

மனிதப்படுகொலையை இஸ்லாம் நேசிக்கிறது. முதலில் படுகொலை, பின்பு சிறைபிடித்தல் என்பதே, கடைப்பிடிக்க வேண்டிய பொன்மொழி.

இஸ்லாமின் இந்த அல்லாவும், இந்து மதத்தின் ஈசுவரனும் ஒன்றா? உங்களுக்கே நேர்மையுள்ளவராயிருந்து, விடைகூறுங்கள்.

ஒரு மாற்றத்துக்காக. உங்கள் ஆசான்களையும் போதகர்களையும், அவர்கள், மதம் வன்மத்தைப் போதிக்கவில்லை, எல்லா மதங்களும் ஒரே கடவுளிடந்தான் இட்டுச் செல்லுகின்றன வென்று பொய் உரைத்திருந்தால், கடவுளைப்பற்றி இரு மதங்கள் எதிரிடையான பண்புத்திறங்களைக் கொண்டிருப்பது மிகத் தெளிவாகத் தோன்றுவதால், அவர்களைக் கேட்கும் துணிவைச் சிறிது கொள்ளுங்கள்.

இவ்விருவருமே ஒரே கடவுள்தானாவென்று பட்டவர்த்தனமாக அவர்களிடம் சவால் விடுங்கள். அவர்கள் விளக்கந்தரட்டும்.

## *அல்லாவின் இந்தக் கட்டளைகள், குரானின் ஏடுகளுக்குள்ளேயே இருக்கத்தானென்று உங்களை ஏமாற்றிக் கொள்ளாதீர்கள்*

இவற்றின் சொல்லுக்குச் சொல் நேர் உருவகமாக நபி, தானே வாழ்ந்து, அதனால் இவை எல்லா முஸ்லீம்களும் நிரந்தரமாகக் கடைப்பிடிக்க வேண்டிய சட்டங்களாயின.

*ஸாஹிஹ் புகாரி 82.794-7 ஸாஹிஸ் முஸ்லீம் 4130-7* (Eminent Historians (p94) என்ற நூலில் கொடுக்கப்பட்டுள்ள மேற்கோள்) "நபி அவர்களைப்பிடித்தார். பின்பு அவர், அவர்களுடைய கைகளையும் கால்களையும் வெட்டுமாறும், காய்ச்சப்பட்ட இரும்புத்துண்டுகளை அவர்களுடைய கண்களில் தீக்குறியிடச் செய்யுமாறும் உத்திரவிட்டார். வெட்டப்பட்ட கைகளையும் கால்களையும் அவை இறக்கும் வரை உதிரம் பெருக்கவேண்டுமென்பதால், அவற்றைத் தீச்சூடு போடவேண்டாமென்று உத்திரவிட்டார். 'அவர்கள் குடிக்க ஜலம் கேட்டபோது, அவர்களுக்கு ஜலம் தரப்படவில்லை' என்று ஹதீஸ் பதிவு செய்திருக்கிறது."

'உக்ல்' என்ற இனத்தாரில் சிலர் இஸ்லாமைத் தழுவிப், பிறகு அதை விடுத்தவர்கள் பற்றிய முஹம்மது நபியின் ஆணைகள் அவை.

*ஸாஹிஹ் புகாரி 84.057* (Eminent Historians pp 93-94) "தன் இஸ்லாம் சமயத்தை மாற்றிக்கொள்பவன் யாராயிருப்பினும் அவனைக் கொல்லவும்."

*குரான் 4.91* (Eminent Historians p93) "அவர்கள் தம் முதுகுப்புறங்களைக்காட்டினால், அவர்களை எங்கு கண்டாலும் பிடித்துக் கொல்லுங்கள்".

இஸ்லாமை ஏற்றுக்கொண்டு, பிறகு தம் மரபுவழிச் சடங்கு முறைக்கே திரும்பியவர்கள் பற்றிய தொடர்புடையது இது. ஆசிரியர்களும் போதகர்களும் பொது மக்களைத் தவறான வழியிலிட்டுச் சென்றால், அவர்களே தமது செய்கைகளுக்கான பலன்களை, இந்தப் பிறப்பிலோ அல்லது அடுத்த பிறப்பிலோ அனுபவிக்க வேண்டியதாகுமென்பதை அவர்கள் கட்டாயம் அறிய வேண்டும்.

## *உங்கள் அறியாமையையும், தம்மையே ஏமாற்றிக்கொள்ளும் மேதகைமையையும் உங்களிடம் நம்பிக்கைவைத்துள்ள, எளிதில் ஏமாறக்கூடிய மக்களுக்கு ஏன் மாற்றுகிறீர்கள்?*

என் வாசகர்களிலொருவர், 25-10-2004 அன்று, என்னைக்காணவந்தபோது பின்வரும் கதையைச் சொன்னார். அவர் போனபின், இரண்டு மணிநேரம் கழித்து இதைநான் எழுதினேன். வார்த்தைகள் மட்டும் என்னுடையவை; அனுபவம் அவருடையது. "கல்லூரி நாட்கள் அவை, மும்பை, வடாலாவுக்கு ஒருஸ்வாமிஜி போதகத்துக்காக வந்திருந்தார். அவருடைய பெயரைக்கூற நான் விரும்பமாட்டேன். நான், கேட்போர் கூட்டத்தில் இருந்தேன். இந்து மதம் பற்றி அவர் பேசிக் கொண்டிருந்தார். திடீரென அருகாமையிலிருந்தவொரு பள்ளிவாசலிலிருந்து, ஒலிபெருக்கியின் உச்சத்தொனியில் தொழுகைக்கான அழைப்பு (அஸான்) ஒலித்தது. ஸ்வாமிஜி நிறுத்திவிட்டார். 'அஸான்' முடிவுற்றபின், ஸ்வாமிஜி தான் அதுகாறும் பேசிக்கொண்டிருந்ததைத் தொடர்ந்திருக்கலாம். ஆனால் அவர் அந்த 'அஸானை'ப்பற்றியொரு கருத்துரையை மிக முக்கியமாகக் குறிப்பிட்டார். 'அஸான்', ஸாமவேதம் ஓதுவது போன்று தொனித்தது என்றார். இது தேவையற்றயொன்று என்று, என் மனதில் தோன்றியது. இவ்விதம் கூறாமல், அவர், தன் முந்தைய பொருளைத் தொடர்ந்திருக்கலாம்."

அவர், இஸ்லாமை மேன்மைப்படுத்திக், கேட்போர் கூட்டத்தைத் தவறான வழிக்கு உட்படுத்தினார். இது இங்கே நின்றுவிடாது. கூட்டத்திலிருந்தவர்கள் இதை மற்றோருக்குக்கூற, இந்தத் தீங்கான செயற்பாடு தொடரும், இதைத், தன்னையே ஏமாற்றிக்கொள்ளும் மேதகைமை என்பேன் நான். இந்தப் பண்புத்திறத்தை இந்துப் பொதுமக்களுக்கு வழங்குவதில் அவர்களுக்கு விருப்பம். இவ்விதமாகத்தான் அவர்கள் இந்துப்பொதுமக்களை தம்மைத் தற்காத்துக்கொள்ளச் சாத்தியமில்லாத நிராயுதபாணிகளாக, வன்மையான முறையில் செய்துவிடுகிறார்கள். ஒரு வழிகாட்டியென்ற முறையில், நீங்கள் அதர்மத்தை மேன்மைப்படுத்தினால், உங்களைப் பின்பற்றுவோரும் அதர்மப்பாதையையே எடுத்துக்கொள்ளுவார்கள்; அந்தச் செயற்பாட்டைத் திருப்புவது கடினம், அற்பமான சமயமனப்பாங்கைக் கடந்த ஒரு ஆன்மீக நபராக, அவர்கள் முன்பாகத் தோன்ற நீங்கள் விரும்புகிறீர்களா? ஒரே விதமான அன்புடனும் மதிப்புடனும் எல்லா மதங்களையும் அணைத்துக் கொள்ளும் விசாலமான இதயம் உங்களுக்கிருப்பதாக ஒரு தோற்றத்தை அவர்களுக்குக்காட்ட விரும்புகிறீர்களா? மேதகைமைக்கு உரியதல்லாதவொரு சமயத்தை மேன்மைப்படுத்துவதன் மூலம், மேதக்கதான சமயத்துக்கு நீங்கள் நேர்மையற்றவராகவிருப்பது, உங்கள் மனதில் படவில்லையா?

ஒரு விஷயத்தை நினைவில் வையுங்கள்: நீராகட்டும், மனித ஒழுக்கமுறையாகட்டும், அவை மேலிருந்து கீழ்நோக்கிப்பாய்வன. சாதாரண மனிதன், ஸ்திரீ, குழந்தை அனைவரும், மிக உயர்வான-அதிலும் சமய மரபுகளில் உயர்ந்த படிநிலைகளில் உள்ளவர்களிடமிருந்து, - அவர்களைப் போதகர்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள், வழிகாட்டிகள், குருமார் எவ்விதமாகக் கற்பித்துக்கொண்டு நீங்கள் பெயரிட்டாலும் - கற்கிறார்கள்.

எப்போதும் விதிவிலக்குகள் உண்டு. பெரும்பாலானோர் வரிசையில் இல்லாமல் இருப்பவர்கள் குறைவு, மிகக்குறைவு. பொது மக்களிடம் ஒரு விழிப்புணர்வையுண்டாக்க அவர்கள் தீவிரமாக உழைத்தாலும், அவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாகவில்லாத சிறுபான்மையினரே, அவர்கள் குரலெழுப்பினால், அவர்களுடைய கருத்துரு, ஊடங்களைத் தவறாகப்பயன்படுத்தி பொதுவில் கறைப்படுத்தப்படும். ஆகையால் அவர்கள் தனியொதுக்கமாக வேலை செய்வதையே விரும்புகிறார்கள்; இதுவரை அவர்கள் போற்றத்தக்கவிதமாகவே தம் பணியைச் செய்திருக்கிறார்கள். தம் பணியை அவர்கள் ஆரவாரமின்றித் தொடர்வது சரியே. காலம் உங்களோடில்லாதபோது, உங்கள் தலையைச் சுவற்றில் முட்டிக்கொள்வதில் அர்த்தமில்லை. காலம் உங்கள் பக்கம் வரும்போது, சுவரே உங்களுக்கு வழிவிடும். ஆனால் காலத்தை எவ்வாறு கண்டறிவீர்கள்? தன்னை வெளிப்படுத்திக் கொள்ளக் காலத்திடம் ஒரு வழியுண்டு அந்தத் தருணத்துக்காகத் தயாராயிருங்கள். இப்போதிலிருந்தே உங்களைத் தயார் செய்து கொள்ளுங்கள். நீங்கள் பகிரங்கமாக வெளியே வருவதற்கான காலம் நெருங்குகிறது. அந்தக் கடினமான முடிவை நீங்களே எடுக்கவேண்டி வராது. நீங்கள் பொதுவில் வரக் காலமே உங்களைக் கட்டாயப்படுத்தும்; அப்போது பொது மக்கள் யாவரும் உங்கள் பின்னே திரண்டிருப்பதை நீங்கள் காணலாம். இந்து தர்மத்தின் மிக முக்கியமானவர்கள் தலைமையேற்பதைக் காணப்பொதுமக்கள் எதிர்பார்ப்பார்கள். நீங்களொரு புறமாக அமர்ந்து, அனைத்தையும் கவனிக்கவேண்டிய அவசியமிராது.

## *ஒருமுறை விதைக்கப்பட்டவித்து, காலப்போக்கில் வளர்ந்து ஏராளமான கிளைகளைப் பெருக்கும்*

2004ஆம் ஆண்டு ஜூலை மாதம், மிகவும் கௌரவமானவொரு பெரிய மனிதர் என் வீட்டுக்கு வந்து, பிரம்மகுமாரி ஈஸ்வரீய விஸ்வவித்யாலயத்தில் நடைபெற்ற பேருரைகளைக் கேட்கவருமாறு அழைத்தார். உரையாடிக்கொண்டிருக்கும்போது அவர், பிரம்மகுமாரிகள், சமயக் குறுகிய மனப்பான்மைக்குள் தம்மை வைத்துக்கொள்ள வில்லையென்றார். பக்ரீத் நாளில் தன், 'நான் எனும் முனைப்பை'ப் பலி கொடுக்கும் குறிப்பீடாக ஆடுகளைப் பலிகொடுக்கும் வழக்கத்தை ஆரம்பித்தவர் முஹம்மதுதான் என்பது எனக்குத் தெரியுமோவென்றும் அவர்கேட்டார். பதிலுக்கு நான், காபாவிலிருந்த கடவுள் சிலைகளை நூற்றுக்கணக்கில் முஹம்மது தன் கைகளாலேயே அழித்தாரென்பது அந்தப் பெரிய மனிதருக்குத் தெரியுமோவென்று கேட்டேன். இதற்கு அவர், 'அதில் தவறென்ன? அந்த விக்கிரஹங்களுக்குத் தம்மையே காப்பாற்றிக்கொள்ள முடியவில்லையே' என்று விடைதந்தார். இதைக் கேட்டதும் நான், 'மன்னிக்கவேண்டும். பிரம்மகுமாரிகள் இதையே உங்களுக்குக் கற்பிப்பதானால், அங்கே வந்து, அவர்களுடைய உரையைக்கேட்க எனக்கு விருப்பமில்லை," என்றுவிட்டேன். பின்னாலே என் மனதில் எழுந்திட்ட கேள்வி, தம்மையே காப்பாற்றிக்கொள்ள முடியாமல் உதவியற்றிருந்ததனால், இந்தச் சிலைகளை அழித்தை நியாயப்படுத்தப்படுவதன் மூலம், வலிமையற்ற எவரையும் வலிவுடையவன் அழிக்கலாம் என்பது - அதுதானே செய்தி?

அந்தப் பெரிய மனிதர், இரு மாதங்களுக்குப் பின்பு என்னைச் சந்தித்துத், தன் வீட்டுக்கு எப்போதாவது வருமாறு அழைத்தார். அந்தச் சிறிது நேரச் சந்திப்பின் போது, சில நிமிடங்களுக்குப்பின், 'அஸான்' பற்றிய பேச்சையெடுத்து அது 'ஓம்' என்ற ஒலியோடு ஒப்பிட்டார். இந்த மனிதர் சீர்திருத்த முடியாத அளவில் ஊழலாகிவிட்டாரென்றே என் மனதுக்குத் தோன்றியது.

இந்தச் சம்பவம் 2004இல் நடந்தது. 25 வருடங்களுக்குமுன் ஒரு ஸ்வாமிஜி, அஸானை ஸாமவேதத்துக்கு ஒப்பிட்டார். இப்போது அது மீண்டும் தலையெடுத்து 'ஓம்' என்பதோடு ஒப்பிடப்படுகிறது.

எனவே, ஒருவித்து விதைக்கப்பட்டபின், காலத்தோடு வளர்ந்து, அதன் பல்வேறு கிளைகளை விரித்துப் பரப்புகிறது!

## *ஈஸ்வர் அல்லாஹ் தேரே நாம் - நிஜமா, கற்பனையா?*

காந்தி இந்துக்களுக்கு 'ஈஸ்வர் அல்லாஹ் தேரே நாம்'-ஈஸ்வரன் அல்லாஹ் என்பவை ஒரே கடவுளின் பெயர்கள்-என்று கற்பித்தார். இந்தத் தூண்டிற்புழுவை இந்துக்கள் எடுத்துக்கொண்டார்கள்; ஆனால் எந்த முஸ்லீமும் எடுத்துக் கொள்ளவில்லை. அவர் இதைப் பரப்பியது அறியாமையாலோ என்ற கேள்வி விடைக்காகக் காத்திருக்கிறது. அல்லது, ஒரு புனிதராக ஆகும் அவருடைய வேட்கையெனும் பலிபீடத்தில், ஒரு முழுமையான சமுதாயத்தைப்

பலியிட்டுத் தனக்கு ‘மஹாத்மா’ வென்றகாட்சியுருவை உண்டாக்கிக்கொள்ளுதற்காக, வேண்டுமென்றே அவ்விதம் செய்தாரா, Arise Arjun Awaken my Hindu Nation பார்க்கவும்), நமது அன்னை தெரெஸாவைப் போல? Popes Saints....பார்க்கவும்.

அது எதுவாயினும் புறக்கணியுங்கள்; ஆனால் விளைவோ அழிவையுண்டாக்குவதையும், பரந்த செயல் விளைவுடையதாகவும் ஆனது. அடிக்கடி, அதிக அளவிலூட்டப்பட்ட அவருடைய போலிக் கருத்தியல், அபினியைப் போலாகிவிடவே, இந்துச் சமுதாயத்தை அனைத்துச் செயலுமிழந்த முழு மயக்கநிலைக்குக் காந்தி இட்டுச் சென்றார்; இதுகாறும் அதிலிருந்து இச்சமுதாயம் மீளமுடியாததாகிவிட்டது.

காந்தி இறந்துபோனபின், அவருடைய தளபதியான நேருவும் அவருடைய உடந்தையாட்களும், இந்துச் சமுதாயம் அந்த முழுமயக்கநிலையிலிருந்து வெளிவரும் அறிகுறிகள் தென்படும் போதெல்லாம், அந்த அபினியை உட்செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

# கம்யூனிஸம்

## ஓ கடவுளே! கடவுளில்லாதிருப்பதேமேல்

கிறித்துவ விவிலியத்தின் கடவுள் மற்றும் குரானின் அல்லாஹ் இருவரின் உண்மைத்தன்மையைக் கண்டோரின், மனதில் அநேகமாக இதுவே எண்ணமாயிருந்திருக்கும். அவர்களுக்குப் புதிய ரட்சகர் ஒருவர் எழுந்தார்; அவர் பெயர் கார்ல் மார்க்ஸ். புதிய சமயமொன்றை அவர் நிறுவினார்; அதன் பெ சயர் 'கம்யூனிஸம்' தான் நிறுவியது ஒரு சமயமல்லவென்றே அவர் வாதித்தாலும், ஒரு சமயத்துக்கான ஆக்கக்கூறுகளையெல்லாம் ஆனால் வேறு தோற்றத்தில்-அது கொண்டிருந்தது. யூதம், கிறித்துவம், இஸ்லாம் ஆகிய மூன்றிலிருந்தும் 'கடவுள்' என்பதை மட்டும் நீக்கிப், 'பணம்' என்பதைக் கூட்டிச், சிரமப்பட்டு அதுவடிவமைக்கப்பட்டதாகும். ஆனால், மக்கள் அதை அவ்விதமாக அறிந்துணரத் தவறிவிட்டார்கள். ஏனெனில் அவர்கள், தமக்குக் காட்டப்பட்டதை மட்டும் பார்த்தார்களே தவிர, அவர்களுடைய பார்வையிலிருந்து மறைக்கப்பட்டதையல்ல.

## கிறித்துவ நாடுகளான இங்கிலாந்து, ஜெர்மனி இரண்டிலும் வளர்ந்தது கம்யூனிஸம்

இங்கிலாந்தும் ஜெர்மனியும் கிறித்துவத்தின் நாடுகளென்பதில் ஏதேனும் சந்தேகமிருக்கிறதா? இதோ, சில உண்மைகள். இயேசு கழகத்தாரை வெளியேதுரத்த அவசியமில்லையென்று, ஏதோவொரு காலகட்டத்தில் தீர்மானித்த, ஐரோப்பாவின் ஒரே தேசம் இங்கிலாந்து. வாடிகனுக்கு மிகப்பெருமளவில் நன்கொடை வழங்கிய தேசம் ஜெர்மனி உத்தியோகம் பார்ப்பபோரின் சம்பளத்தில் 'திருச்சபை வரியைக் கழித்த தேசம் ஜெர்மனிதான்.

"ஐரோப்பாவில் இங்கிலாந்து நீங்கலாக மற்ற தேசங்கள் ஒரு கால கட்டத்தில் எரிச்சலூட்டப்பட்டு, இயேசு கழகத்தாரை வெளியேற்றின....அக்கழகத்தாரின் தளராத கடும் விடாமுயற்சியின் விளைவான தீச்செயல்கள், இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கின்றன."-எச்.ஜி.வெல்ஸ் (Myth of St Thomas p 121 note)

*ஆக்ஸ்ஃபோர்டு அகராதி - இயேசு கழகத்தவர் (Jesuit) :* 1534இல், புனித இக்னேஷியஸ் லயோலா, புனிதஃ பிரான்ஸிஸ் ஸேவியர், இன்னும் சிலரால் சமயப்பரப்பு வேலைக்காகத்தோற்றுவிக்கப்பட்ட, ஒரு ரோமன் கத்தோலிக்கச் சமயக்குருமாரின் மரபொழுங்கான இயேசு கழகத்தின் (ளுடிஉநைவல டிக துநளரள) உறுப்பினர். இக்குழு, சீர்திருத்தத்தை எதிர்ப்பதில் வெறிகொண்டது. இடையிடையே விடாத்துயரளிப்பு இருந்தும், அது, கத்தோலிக்கக் கல்வியிலும் சிந்தனையிலும் முக்கியத்தாக்கம் அளித்தது. (ப.981)

"1944ஆம் ஆண்டு ஒன்று மட்டிலுமே வாடிகனுக்கு நாஜிகள் அளித்த நன்கொடை 100 மிலியன் டாலர்களுக்கும் இன்றைய மதிப்பில் நூற்றைம்பது கோடி அதிகமானது. இரண்டாவது

உலகப்பெரும் போரின்போது, ஐரோப்பிய யூதர்களிடமிருந்து நாஜிகள் கொள்ளையடித்த தங்கத்தில் பெரும்பகுதியையும் வாடிகன் சாமர்த்தியமாகப் பெற்றது....சில ஐரோப்பிய தேசங்கள்- குறிப்பாக ஜெர்மனி கூலிவேலையர் ஒவ்வொருவருக்கும் இரண்டு சதவிகிதத் 'திருச்சபைவரி' விதித்ததுபற்றிப், பாரததேசத்தில் பலருக்குத் தெரியாது" A Hindu View of the World p 134

## *கார்ல் மார்க்ஸ், ஃபிரெடெரிக் எஞ்ஜல்ஸ் இருவரும் ஆங்கிலேயத் தொடர்புடைய ஜெர்மானியர்*

1849 முதல் இங்கிலாந்தில் வசித்தவர் கார்ல் மார்க்ஸ் - *கார்ல் மார்க்ஸின் பின்னணி:* கார்ல் (ஹென்றிச்) மார்க்ஸ் (1818-83) எனும் ஜெர்மானிய அரசியல் ஞானி மற்றும் பொருளாதார வல்லுனர், 1849 முதல் இங்கிலாந்தில் வசித்தவர் ஃபிரெடெரிக் எஞ்ஜல்ஸுடன் இணைந்து, நவீன கம்யூனிஸத்தை நிறுவியர். எஞ்ஜல்ஸோடு கூட்டாகக் 'கம்யூனிஸக் கொள்கை விளக்க அறிவிப்பு' (Communist Manifesto-1848) எழுதிப், பின்பு அதை விரிவுபடுத்திப் பல நூல் தொடர்களை-மிகக் குறிப்பிடத்தக்க Das Kapital மூன்று தொகுதிகள்-எழுதினார் (அகஸ். அகராதி ப.1137) - *ஃபிரெடெரிக் எஞ்ஜல்ஸின் பின்னணி:* ஃபிரெடெரிக் எஞ்ஜல்ஸ் (1820-5)- ஜெர்மானியப் பொது நலக்கூட்டுக் கொள்கையாளர் மற்றும் அரசியல் ஞானி, மார்க்ஸுடன் இணைந்து 'கம்யூனிஸக் கொள்கை விளக்க அறிவிப்பை' (1848) எழுதிப், பின்னர் மார்க்ஸின் பிற நூல்களை மொழிபெயர்த்துப் பதிப்பித்தார். '1844இல் (1845) இங்கிலாந்தின் தொழிலாளர் வர்க்கத்தின் நிலை' (The Condition of The Working Classes in England) என்ற நூலை இவர் எழுதினார். (ஆக்ஸ். அகராதி:ப.611)

## *இருவருமே குணத்திலும் உளத்திலும் கிறித்துவத்தின் கணிசமான தாக்கம் கொண்டவர்கள்*

இருவருமே கிறித்தவர்களாக வளர்க்கப்பட்டவர்கள். அவர்களுடைய வாழ்க்கையின் தொடக்கக்காலத்தில் கிறித்துவம் அவர்களுடைய உளத்தில் தாக்கம் கொண்டிருந்தது. அவர்களுடைய குடும்பத்தினர் பல தலைமுறைகளாகக் கிறித்துவத்தின் பண்பமைதியைக் கொண்டிருந்து அவற்றைத் தம் பிந்தைய தலைமுறைகளுக்கும் கொடுத்துச் சென்றார்கள். கிறித்துவப் பண்புக்கூறுகளோடு வடிவமைக்கப்பட்டுக், கிறித்துவ வழிகளில் அவர்களுடைய குணநலன்கள் எழுப்பப்பட்டிருந்தன.

### *வாழ்க்கையின் பிற்காலத்தில் அவர்கள் கிறித்துவத்தை வெறுப்போராக ஆகியிருக்கலாம்*

வளர்ந்தபின் அவர்கள் பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டுக் கிறித்துவத்தின் மோசமான முகத்தைக் கண்டார்கள்; குரான், ஹதீஸ் ஆகியவற்றைக் கொண்ட இஸ்லாமின் ஆக்கிரோஷமான முகத்தையும் பார்த்தார்கள். இந்தச் சமயங்களின் மருட்சியிலிருந்து விடுபட்டு, மாற்றாகவொன்றைத் தேடவே, கம்யூனிஸம் பிறந்தது.

## *கம்யூனிஸத்தை ஏற்குமுன் ரஷ்யா கிறித்துவ நாடாயிருந்தது*

ரஷ்யா மற்றும் அதன் எல்லாக் கிழக்கு ஐரோப்பிய நட்பு நாட்டினர் அனைவரும் பல தலைமுறைகளாகக் கிறித்தவர்களே. அவர்கள் கிறித்துவக்குடும்பங்களில் பிறந்து, கிறித்துவப் பண்புகளோடு வளர்க்கப்பட்டு, இவர்களுடைய மனமெல்லாம் கிறித்துவ வழியிலேயே சிந்திப்பதாயிருந்தன.

## *ரஷ்ய மக்கள் கம்யூனிஸ்ட் நாடாக ஆனபின், உள்ளார்ந்த தம் கிறித்துவப் பண்புகளை உடனடியாக விட்டுவிடவில்லை*

அவர்கள், கம்யூனிஸ்டுகளாக ஆனதைக் கொண்டு, தம் பழைய பண்புக்கூறுகளை இரவோடிரவாக விட்டுவிடவில்லை. நம்புங்கள், அல்லது நம்பாதிருங்கள்-கிறித்துவம் அவர்களுடைய மரபு உயிர்மங்களில் இருந்தேவந்தது. இந்தக் கட்டத்தில் நான் கூறும் இவ்வார்த்தைகளை விஞ்ஞானிகள் மறுக்கக்கூடும்; நான் கூறும் உட்கருத்தைப் புரிந்துகொண்டால் அவர்கள் அநேகமாக ஒத்துக் கொள்ளுவார்கள்.

## *மார்க்ஸியக் கம்யூனிஸம் மாறுவேடங்கொண்ட ஒரு சமயமே தவிர, அதிகக் கவர்ச்சி பெறுவதற்கான முகமூடியாகவிருக்கும் பொருளாதார அரசியல் தத்துவம் அல்ல*

கம்யூனிஸத்தைக் கண்டுபிடித்தவர்களும், அதை அனுசரித்தவர்களும் அரை மனத்தளத்தின் கிறித்துவத் தாக்கத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள முடியவில்லை. அவர்கள் கிறித்தவராகப் பிறந்து, கிறித்தவராக வளர்க்கப்பட்டு, அவர்களுடைய உள்ளம் கிறித்துவத்தால் உருவாக்கப்பட்டு, அவர்களுடைய ஆன்மாவும் கிறித்துவமயமாகவே ஆகியிருந்தது. திணறச் செய்யும் கிறித்துவத்தின் பிடியிலிருந்து தம்மை விடுபடுத்திக் கொள்ள அவர்கள் கடுமையாக முயன்றும், உண்மையில், அவர்களுடைய உள்மனம் கிறித்துவத்தின் பிடியிலிருந்து ஒருபோதும் விடுபடவில்லை. ஒரு பேயைப் போல அது, அவர்களுடைய உள்ளத்தையும் செயல்களையும் எப்போதும் கட்டுப்படுத்தியிருந்தது. இந்தச் செயல்முறையில் அவர்கள் தம்மைக் கொண்டே மற்றொரு சிக்கல் வாய்ந்த உருவடிவத்தைப் படைத்தார்கள். இந்த உருவடிவங்கள் கம்யூனிஸ்டுகள் அல்லது மார்க்ஸியர்கள் என்றழைக்கப்பட்டனர்.

## *கிறித்துவச் சாம்பலிலிருந்து கம்யூனிஸம் எழுந்ததென்பதைக் கேட்க வியப்படையாதீர்கள்*

கிறித்துவக்கடவுளைப் பெரிதும் இழிவுபடுத்த அவர்கள் விரும்பினார்கள்; எனவே, கம்யூனிஸம் கடவுள் நீக்கப்பட்ட கிறித்துவமாயிற்று. அவர்கள், பெரும்பாலான நேரம் பொருளாதாரத்தைப்

பற்றிப்பேசினார்கள்; எனவே, கம்யூனிஸம் கடவுள் நீக்கப்பட்ட, பணம் இணைத்துக் கொள்ளப்பட்ட கிறித்துவமானது. அவர்கள் மிக நன்றாகக் பொருளாதாரத்தைத் தவறாகப் புரிந்து கொண்டார்கள். அவ்விதமாக, அவர்களுடையது ஒரு கருத்தியலாக ஆகி, நடைமுறையில் இரங்கத்தக்க அளவில் நொடித்துப்போனது. இச்செயல்முறையால் அவர்கள் பேரளவினதாகத் தம்மையே ஏமாற்றிக்கொண்டதோடு, தம் தொற்றிப்பரவும் அறிவீனத்தில் உலகையும் ஏமாற்றினார்கள். இறுதிப் பகுப்பாய்வில் அவர்கள், கிறித்துவத்தின் மோசமானதும், ஊழல் கொண்டதுமான வடிவக்கூறு ஆனார்கள். ரஷ்யாவில் சில காலத்துக்கு முன்புவரை இருந்த இரும்புத்திரை தூக்கப்பட்டதும், அவர்களுடைய கோரமான, ராட்சதமுகம் வெளிச்சத்துக்கு வந்தது. கிறித்துவத்தின் எல்லா மோசமான தனிப்பண்புகளைத் தக்கவைத்துக்கொண்டு, அவற்றைப் புதிய உயரங்களுக்கு எடுத்துச் சென்று, அவையனைத்தையும் மிகவும் திறம்பட உள்ளிட்டு மூடும் கலையில் தேர்ச்சி பெற்றிருந்தனர்.

## *இனப்பிரிவற்ற சமுதாயத்துக்கு ஆஸ்திகளின் சம வினியோகம் தரும் ஒரு கனவுக்கருத்தியல் கம்யூனிஸம் என்பதாக ஏமாறாதீர்கள்*

பேச்சு மற்றும் ஊக்கொலி விற்பனைக்கும் அவ்வளவுதான் இந்தப்பேச்சுக்கள் புது மீன்களைப் பிடிப்பதற்கு உரியவை. பாவம்! அங்கீகாரம் பெறுவதற்கு அவர்கள் எண்ணிக்கையில் வளரத்தானே வேண்டும்! உண்மையில், ‘அன்பின் அவதாரம் இயேசு’ என்பதைப் போலவே, திரைக்குப்பின்னே இவையாவும் ஒரு முகப்பாக உள்ளன. இவை மக்களை ஏமாற்றுவதற்காக. கிறித்துவமென்ற அடித்தளத்தில் வளர்ந்தவர்களாகையால், திறம்பட உலகத்தாரிடம் எவ்வாறு பொய் கூறுவதென்பதைக் கம்யூனிஸ்டுகள் நன்கறிந்தவர்கள்.

## *கடவுள் ‘இல்லை’யென்ற கருத்துப்பாங்கைக் கம்யூனிஸம் ஏன் வளர்த்தது?*

கம்யூனிஸ்ட் குருமார், ‘நம் கடவுள்’ அல்லது ‘ஒன்றேயான கடவுள்’ என்பதை நம்பும் மதங்களிலுள்ள தீயவற்றைக் கண்டபின், ‘எல்லா’ மதங்களுமே தீயவையென்ற தவறான முடிவுக்குத் தாமாக வந்தார்கள். அவர்கள், ஒரு விடுவிக்கக்கூடிய மதத்தைக் கண்டிருக்கக்கூடிய இந்து மதத்தைப் பற்றிப் போதிய அளவு அறியாமலிருந்தது அவர்களுடைய துரதிருஷ்டம். இந்து ம்தத்தைப் பற்றிய ஏராளமான அவநம்பிக்கைகள் அவர்களிடம் இருந்தன. இந்து மதம் பற்றிய முற்றிலுமாக ஏற்கமுடியாதவாறு ஒருகாட்சியுருவைக், கிறித்துவம் அவர்களுடைய மனதில் ஏற்கெனவே பூசியிருந்தது. யூதம், கிறித்துவம், இஸ்லாம் ஆகியவற்றில், ‘எங்கள் கடவுள் ஒருவர் மட்டுமே கடவுள், அவர் கொலைகாரக் கடவுள், கற்பழிக்கும் கடவுள், அழிக்கும் கடவுள்’ என்ற நம்பிக்கையில்தான், எல்லாத் தீமைகளுக்குமான வேர் என்பதை அவர்கள் கண்டார்கள், யூதக் கடவுள், கிறித்துவக் கடவுள், இஸ்லாமிய அல்லாஹ் ஆகியோரின் உண்மையான குணப்பண்புகளைக் கார்ல் மார்க்ஸும், ஃபிரெடெரிக் எஞ்ஜெல்ஸும் கண்டபோது, அப்படிப்பட்ட கடவுளே இல்லாமலிருந்தால் மனித இனத்துக்கு நன்மையென்று உணர்ந்தனர். ஆகையால்

அவர்கள் கடவுளைச் சரித்திர ஏடுகளுக்குள்ளேயே இருக்கச் செய்துவிட்டார்கள். ‘கடவுள் ஒரு சரித்திரக் கருத்துப்பாங்கு’ என்று லக்ஷ்மி லியோ (அல்லது லோபோ) என்பவர் 2003இல் (இ.மெயில் மூலம்) எழுதியிருந்தார்!

## *கடவுள் இல்லை என்பதை நீங்கள் பின்பற்றும்போது நேருவ தென்ன?*

எந்த மனிதனும் எப்போதும் வெளிக்காட்டத்தக்க தெய்வீகக் குணப்பண்பை இழக்க ஏதுவாகிறது. வலிமையும் பணமும் உங்கள் கடவுளாகி, வலிமை, பணம் இவற்றைக் கொண்டு நீங்களே கடவுளாக விளையாட ஏதுவாகிறது. பொது நிலையாளர்களிடம் ஒரு இயற்கையான வலுக்குறைவிருப்பதைத், துறைபோனவர்கள் அறிவார்கள். மனிதர்களென்ற முறையில் இந்தப் பொதுநிலையாளர்கள் கடவுளில்லாமல் வாழ முடியாதென்பதைத் துறைபோனவர்கள் மிக நன்றாக அறிவார்கள். எனவே இவர்கள் சந்தர்ப்பத்தைப் பறித்துக்கொண்டு, கடவுளை மாற்றீடு செய்து, அவருடைய நிலையைத் தாம் எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஒரு மதம் என்பதற்கு இருக்க வேண்டிய பண்புத்தன்மைகள் எதையும், அதிலும் மிக அதிகமானதாகக் கம்யூனிஸம் சிறிதும் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் இங்கு ஆண்களும் ஸ்திரீகளும் கடவுளாக விளையாட முயலுகிறார்கள். அதே சமயம், ஒரு நல்ல மதம், மனித இனத்துக்குத் தரக்கூடிய ஆக்கபூர்வமடானவை எதையும் அது நடைமுறையில் கொண்டிருக்கவில்லை.

## *அவர்கள் மறுக்க எப்போதும் தயாராயிருப்பினும் கம்யூனிஸம் ஏன் ஒரு சமயம்?*

*சமயம் (மதம்) :* சக்தி ஆதிக்கமுடையதும், மனிதனுக்கு மேம்பட்டதுமான ஒன்றில், விசேஷமாகவொரு தனி விருப்பமான கடவுள் அல்லது கடவுளரில் நம்பிக்கை வைப்பதும் வழிபடுவதுமாகும். (ஆக்ஸ். அக. ப.1567)

கம்யூனிஸத்தில், மனிதனுக்கு மேம்பட்ட சக்தியாதிக்கமுடைய நிலையைக் கட்சி எடுத்துக்கொள்ளுவதோடு, கட்சியை ஆதிக்கத்தில் கொண்டுள்ள சிலர், தனிவிருப்பக்கடவுள் அல்லது கடவுளரின் நிலையை எடுத்துக்கொள்ளுகிறார்கள். அதனால்தான் கம்யூனிஸ்டுகள் கடவுளையொருச் சரித்திரக் கருத்துப்பாங்காகவே பாவிக்கின்றனர். அதனால்தான் கம்யூனிஸ்டுகள், தம் தற்போக்கெண்ணம் மற்றும் விருப்பார்வத்துடன் சரித்திரத்தைத் திருத்தியெழுதிக், கடவுளரின் நிலைகளைத் தாமே புனைந்து கொண்டார்கள் நாளாவட்டத்தில் அவர்கள், தாம் மட்டுமீறிய தன்னம்பிக்கை கொண்ட முட்டாள்களேயன்றி வேறில்லையென்பதைக் கற்கவே.

## *மார்க்ஸிய கம்யூனிஸத்தின் கிளைவிளைவு*

கிறித்துவ ஆதிக்க உலகில் கம்யூனிஸ்டுகள் விலக்கியொதுக்கப் பட்டவர்களாக ஆகிவிட்டபடியால், புத்திகூர்மையுடைய மக்கள் தமக்கு ‘மதச்சார்பற்றவர்கள்’ என்ற புதுப்பெயரை

உண்டாக்கிக் கொண்டார்கள். இவர்கள் ஏதோவொரு வகையில் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களிடமிருந்து தம்மைத் தனிப்பட்டோராகக் காட்டிக்கொண்டனர். ஆனால், அவர்கள். வளர்ந்து வந்திருந்த கலாசாரம் மற்றும் பயன்தகுதிகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள முடியாமல், தம் உண்மையான இடம் எதுவென்று சரியாக அறியாதவர்களாகப், பூமிக்கும் விண்ணுக்குமிடையே எங்கோ ஊசலாடினார்கள்.

## *எப்போதும் கிறித்தவ ஆதரவாளராகவும் முஸ்லீம் ஆதரவாளராகவும், ஆனால் இந்து எதிர்ப்பாளராக நமது மதச்சார்பற்றவர்களைச் செய்வது எது?*

<u>நான் கூறுவது பாரததேசத்தில் தம்மை மதச்சார்பற்றவர்களாகச் சொல்லிக்கொள்வோரைப் பற்றித்தான்.</u> எப்போதுமே அவர்கள் கிறித்தவ ஆதரவாளராக, முஸ்லீம் ஆதரவாளராக, அதே சமயம் இந்து எதிர்ப்பாளராகவிருப்பது, மதச்சார்பின்மையென்ற பெயரில் ஏய்க்கும் மோசடிக்காரர்களாக அவர்களை ஆக்குகிறது; ஏனெனில், உண்மையான மதச்சார்பற்றவன், எல்லா மதங்களிடத்தும் நடுநிலைமை வகிக்கவேண்டும்". எல்லா மதங்களுடனுமான செயல்தொடர்புகளிலும் அவர்கள் நேர்மையாகவும் நியாயத்துடனும் இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அப்படியில்லை. நேர்மை, நியாயமற்றவாறு எப்போதும் ஒருதலை ஆதரவாளராகவே இருக்கிறார்கள். அவர்களிடையே இந்த நிலைபேறுள்ள நடத்தைப்பாங்கு, மதச்சார்பின்மையென்ற பெயரோடு கூடிய மோசடியாளர்களாக அவர்களை ஆக்குகிறது. அவர்கள் ஏன் அப்படியிருக்கிறார்கள்? அவர்கள் நாத்திகர்கள். நாத்திகன் எந்தக் கடவுளையும் நம்பாதவன். ஒருதலைச்சார்பு கொள்ளும் போது அவர்கள் ஒரு கடவுளுடன் சமரசமாக விட்டுக்கொடுப்பார்கள்; ஆனால் ஏராளமான கடவுளரோடு சமரசவிட்டுக்கொடுப்பு என்ற பேச்சுக்கே அவர்களிடமில்லை. சூழமைவுக்குத் தேவைப்பட்டால், அவர்கள் ஒரு கடவுளுடன்-அது எந்தக் கடவுளாயினும் அதுபற்றிச் சிறிதும் கவலைப்படாமல் ஒத்துவாழ்வார்கள்; ஆனால் பல்வேறு கடவுளரைச் சகிப்பது இயலாதவொன்றாய்க் காண்பார்கள்.

## *மதச்சார்பற்றவர்களா? - நாத்திகர்களா?*

கடவுள் நம்பிக்கையில்லாதவன் நாத்திகன். அப்படியானால் மதச்சார்பற்றவன் என்பவன் யார்? அறிவு ஜீவி, இதழாசிரியர், நூலாசிரியர், சிந்தனையாளர் (எத்தனைச் சிறப்புப்பெயர்களை நீங்கள் சேர்த்தாலும் போதாது), நாடறிந்த மதச்சார்பற்றவரும், மிக ஏராளமான ஆர்வலர்களைப் பெற்றவருமான குஷ்வந்த்ஸிங் என்ன சொல்லுகிறாரென்று கேட்போம்.

"கடவுளிருப்பதைச் சந்தேகிப்பவன் அழிகிறான்," என்றெழுதினார் பாபு காந்தி. அந்தச் சந்தேகிப்பவர்களில் ஒருவனாக நான் என்னைக் கருதுகிறேன்; ஆனால் நான் இன்னும் அழிந்துவிடவில்லை. உண்மையைச் சொன்னால், பாபுவை விட நான் அதிக ஆண்டுகள் வாழ்ந்திருப்பதோடு இப்போதும் மட்டையெடுத்து விளையாடிக்கொண்டுதானிருக்கிறேன்." Free Press Spectrum, 10-4-2005, p 7

இப்படிப்பட்ட நபர்கள் பல நேரங்களில் மதச்சார்பற்றவர் என்ற சிறப்புப்பெயரின்கீழ் புகலிடம் கொள்ளுகிறார்கள். அவர்களுடைய நடத்தைகள் மதச்சார்பின்மைக்கு பல காத தூரம் அப்பாற்பட்டவை. இந்துமதவிஷயமாக இது வரும்போது, இந்த எல்லாவிதமான நபர்களும் (அவர்கள் தம்மை எவ்வாறு கூறிக்கொள்ளுகிறார்களென்பதை விடுங்கள்) அவர்கள் எதில் பங்குடையவர்களோ அந்தக் குப்பைப் பெட்டியிலிருந்து மூலத்தோற்றம் பெறும் பொதுவான மனப்பான்மையைக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இந்து மண்ணில் பிறந்து, ஆனால், இந்துமதம் பற்றி எதும் புரியாதவர்களாக இருக்கின்றனர். கிறித்துவ-ஆங்கிலக்கல்வித்திட்டத்தின் தயாரிப்புகள், மார்க்ஸியத் தற்புனைவால் மறுவார்ப்பு செய்யப்பட்டுத், தமது அடித்தளத்தையிழந்து, விண்ணுக்கும் மண்ணுக்குமிடையே மிதக்கிறார்கள். இந்தப் படைப்பில் ஈஸ்வரனுக்கு இடமில்லையென்று அவர்கள் நினைக்கிறார்கள். இந்தப் பிரபஞ்சம் தானாகவே தோன்றித் தானாகவே தன்னை ஓட்டிக்கொண்டிருக்கிறது எனும் நடைமுறைக்கொவ்வாக் கற்பனைக் கருத்தியல்போன்ற ஒன்றை அவர்கள் நம்புகிறார்கள். இதெல்லாம் எவ்விதம் நிகழ்கின்றனவென்பது அவர்களுக்குத் தெரியாது. நவீன அறிவியல் இவையனைத்தையும் வெளிப்படுத்துமென அவர்கள் நம்புகிறார்கள்; அவர்களால் மிகவும் மதிக்கப்படும் நவீன அறிவியல், இந்தப் பிரபஞ்சத்தைப்பற்றி எவ்வளவு குறைவாக அறிகிறதென்பதை அவர்கள் உணரவில்லை.

“லாஸ் ஏஞ்ஜலெஸ்-தேசீய வான் செலவு சார்ந்த விண்வெளிக்கழகத்தின் (சூஹளுஹ) தொலைக்காடியொன்று, பூமியளவிலானதொரு கிரகத்தை உருவாக்கிக்கொண்டிருக்கும் செயல்முறையின் மிக வன்மையுள்ள பகுதிக்கான சாட்சியத்தைக் கண்டுபிடித்துள்ளது. ... பலநூறு மிலியன் ஆண்டுகளுக்கு இது நீடிக்குமென்று விஞ்ஞானிகள், இக்கழகத்தின் கலிஃபோர்னியாவில் பஸடெனாவிலுள்ள பீற்று வளிவிசையேவு சோதனைக்கூடத்தில் திங்கட்கிழமையன்று தெரிவித்தனர்”. The Times of India, Mumbai, 20-10-2004, AP

இவையாவும் தானாக நடைபெறுவதாக எண்ணுபவர்கள், இப்பிரபஞ்சத்தில் கிரகங்களின் உருவாக்கம் எனும் ஒரேயொரு புதிரான காட்சிக்குரிய கால அளவின் மலைப்பூட்டும் பரிமாணத்தைக் கவனியாமல், அறிவாற்றல் ஆடம்பரத்தால் மனம் வியாபிக்கப்பட்ட அறிவிலிகளாகவே இருக்கிறார்கள்! அவர்களுடைய அறிவாற்றல் அகங்காரத்தின் வீக்கம், தம்மைச் சுற்றியுள்ள இப் படைப்பைப் பொறுத்தவரை, தாமே எவ்வளவு அற்பமானவர்கள் என்பதையேற்க இடந்தருவதில்லை. மனிதக் கற்பனைக் கெட்டாதவாறு, மனத்திகைப்பூட்டும் விதமாக மிகப்பேரளவில் ஈஸ்வரன் செய்கின்ற காரியத்தின் மிக நுண்ணிய வடிவமே, மனிதன் தொழில் நுட்பத்தின் துணைகொண்டு செய்கிறான் என்பது அவர்களுக்குத் தோன்றுவதில்லை!

## *அவர்களை மதச்சார்பற்றவர்களெனக் கூறுவதைத் தயவு செய்து நிறுத்துங்கள்*

அவர்கள் மதச்சார்பற்றவர்கள் அல்லவென்பதால், அவர்களை அப்பெயரால் கூறுவதை முதலில் நாம் நிறுத்தவேண்டும். அவர்கள் நாத்திகர்கள்; அதைச் சரியாத தெரிவிக்கும் ஒரு பெயரோடுதான்

அவர்களை நாம் கூறவேண்டுமென்பதை அறியவேண்டும். பெயரினால் உண்டாகும் செயல்விளைவைக்குறைத்து மதிப்பிடாதீர்கள். உணர்வு விழிப்புடன் அதை நீங்கள் கவனிக்காவிட்டாலும், பெயர் என்பது உங்கள் மனதில் ஒரு கருத்துருவை உண்டாக்குகிறது; அந்தக் கருத்துரு, உங்களுடைய உள்ளத்தில் ஆழமானவொரு இடத்தைப் பிடித்துவிடுகிறது. ஆழ்ந்த இடம் கொள்ளும் அந்தக் கருத்துரு உங்கள் வளு உணர்வுகளை அமைக்கின்றது. இப்புலனுணர்வுகள் உங்களுக்கு வழிகாட்டும் அம்சங்களாகி அவை உங்கள் எண்ணங்களையும் செயல்களையும் இயக்கத் தொடங்குகின்றன. எனவே, பெயர் என்பது மிக முக்கியமானதாகும். இந்துவைத்தவிர வேறெவர் அதை நன்கு அறியக்கூடும்? ரத்னாகரதஸ்யூ 'மராமரா' என்று உச்சரித்து, அது படிப்படியாக 'ராம்ராம் என்றாகி, அவரும் மஹரிஷி வால்மீகியாக ஏன் ஆகவேண்டும்?

தயவு செய்து அவர்களை நாத்திகர் என்றே குறிப்பிடத் தொடங்குங்கள். அப்போதுதான் நீங்கள் அறிவுணர்வு முறையில் அவர்களுடைய பிரச்சினை மதச்சார்பின்மையில் இல்லாமல், கடவுள் நம்பிக்கையற்ற நாத்திகத்தில் இருக்கிறதென்பதை உணரத் தொடங்குவீர்கள். அப்போதுதான் இந்துவின் கருத்துக்கோணத்தை அவர்கள் காணுமாறு செய்ய முயல்வது உங்களுடைய திறனை வீணடிக்கும் வேலையென்பதை உணர ஆரம்பிப்பீர்கள். இந்த நாத்திகர்கள் மடிந்தகாரணங்கொண்டவர்கள். அவர்கள் கடவுளை நம்புமாறு செய்வது உங்களுக்கு விடாமுயற்சிக்குரிய வேலையாகும். அதன் பின்பே இந்து மதம் பற்றிய எதுவும் அவர்களுக்குப் புரியும்.

## *மதச்சார்பில்லாதவர்கள் அல்லது ஒப்பான தெய்வீகர்களிடம் உங்கள் திறன்களைத் தயவுசெய்து வீணாக்காதீர்கள்*

கையளவேயுள்ள இந்த அறவிலிகளுக்காக உங்கள் திறன்களை வீணாக்க ஏன் விரும்புகிறீர்கள்? உங்களைச் சுற்றி எல்லாப் புறங்களிலும் அவர்களை அதுவும் ஆட்சிப் பணியாளராக, நாட்டை ஆள்வோராகப், பல்கலைக் கழகத்தினராக, ஆராய்ச்சியாளராக, நீதித்துறையினராகக், கல்விக்கொள்கை உருவாக்குவோராக என்றெல்லாம் காண்பதே காரணம். கருத்துப்பாங்கில் உங்களுடன் முரண்படுவோராக விருப்பதால், அந்தக் கல்விசார்ந்த வகுப்பினரை நீங்கள் பார்க்கிறீர்கள். அவர்கள் ஏராளமானோராக உங்களுக்குத் தோன்றினாலும் எண்ணிப் பாருங்களேன். பிறகு அந்த எண்ணை மொத்த ஜனத்தொகையால் வகுங்கள். நான் அவர்களைக் 'கையளவே'யுள்ளவென்று ஏன் கூறுகிறேன் என்பது தெரியும்.

மாறாகக், கடவுனின் மொழியைப் புரிந்துகொள்ளும் எஞ்சியுள்ள பொது மக்களின்பால் உங்கள் வகைதுறை ஆதாரங்களையும் திறன்களையும் உபயோகியுங்கள். ஆனால் உங்கள் உணமையான பிரிச்சினை இந்தத் தெய்வீகர்கள், தம்மைப் பின்பற்றுவோரிடம், மதிக்கத்தகாத ஊன் உண்ணும் சமயங்களை மதிக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருப்பதே.

## *முடிவு*

பல இந்துப் போதகர்கள், தம்மைப் பின்பற்றுவோரிடம் எல்லா மதங்களும் சமமென்று கூறுவதை விரும்புகிறார்கள்.

சில போதகர்களோ 'இது உண்மையல்ல'வென்று தம்மைப்பின்பற்றுவோரிடம் எச்சரிக்கை செய்கிறார்களெனினும், அவர்களுடைய குரல், பல்வேறு நிர்பந்தங்களின் காரணமாகக் குறைவான தூரமே எட்டுகிறது.

ஊன் உண்ணும் சமயங்களிருக்கின்றன; அவை, படிப்படியாக மற்ற மதங்களை விழுங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை உறுதிபடக்கூறுகிறேன்.

அது, இந்தப் பிரபஞ்சத்தின் எல்லையற்ற பரப்புக்குள் காணாமற்போகவோ, அல்லது சுற்றிலும் மிதந்து கொண்டிருக்கும் சுறாமீன்களால் விழுங்கப்படவோ கூடும்.

*அது பிழைத்து நிற்குமேயானால், கடவுளின் விருப்பத்தால்.*

*காலத்தின் தேர்வுச் சோதனையே இறுதிவார்த்தையாகும்.*

# கடவுள் உருவமற்றவராயும் உருவமுடையவராயுமிருக்கிறார்

உருவற்றவனாய் மனிதன் இருந்தால், உருவமற்ற ஏதோவொன்றை அவன் எவ்வாறு நேசிக்கமுடியும்?

உங்கள் குழந்தை உருவமற்றதாயிருந்தால் நீங்கள் அதனிடம் அன்பு காட்டுவீர்களா?

உங்கள் இறந்துபோன குழந்தையின் புகைப்படத்தை ஏன் நீங்கள் விரும்புகிறீர்கள்? தொடர்பு கொள்ள உங்களுக்கொரு உருவம்-அது மனித உருவில்-தேவையென்பதாலா? அவ்விதப்பயன்பாட்டைப் புகைப்படம் தருவதாலா?

## உருவமற்ற கடவுளை இயேசுவும் முஹம்மதும் ஏன் விரும்பினார்கள்?

மனித இனத்தின் பிற பிரிவினர் யாவரும், அதிக அளவில் உருவமுள்ள கடவுளை வழிபட்ட அந்தக் காலகட்டத்தில் இயேசுவும் முஹம்மதும் உருவமில்லாத கடவுளை ஏன் வற்புறுத்தினார்கள்?

பாரத தேசத்தில் மட்டுமல்லாது எங்குமே அக்காலத்தில் சிலை வழிபாடு இருந்தது. ஐரோப்பா, அரேபியா யாவும் சிலை வழிபாட்டையே கொண்டிருந்தன. மனிதன், தானே உருவங்கொண்டிருப்பதால், அவன் ஏதோவொரு உருவத்தோடு - அது எவ்விதமாயினும் சரி- தன்னைத் தொடர்புபடுத்திக்கொள்ள வேண்டுமென்ற தேவையைக் கொண்டிருக்கிறான் என்பதை, இந்த இரு தீர்க்கதரிசிகளும் நன்கறிந்து கொண்டார்கள். கடவுளின் ஸ்தானத்தில் தாமே இருக்க வேண்டுமென்பது இவ்விரு தீர்க்கதரிசிகளின் ஆசை. இதை நிறைவேற்றிக்கொள்ள ஒரேவழி, உருவமுடைய கடவுளையொழித்து, அதற்குப் பிரதியாக உருவமற்ற கடவுளை அமைப்பதே. கடவுளைமட்டும் உருவமில்லாததாகச் செய்துவிட்டால், அவரோடு நேரடியாகத் தொடர்பு கொள்வது மனிதனுக்குக் கஷ்டமாகிவிடும். அப்படிப்பட்ட நிலை, இயேசு, முஹம்மது எனும் இடையீட்டாளர்களுக்கு வழி வகுக்கும். இதை எண்ணித்தான் இயேசுவும் முஹம்மதுவும் உருவமுடைய கடவுளை ஒழித்தார்கள் போலும்! கடவுள் உருவமில்லாது போகையில் அங்கே ஒரு வெற்றிடம் ஏற்படுமென்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்களோ? மனிதர்கள், அந்நிலையில், தம் இயல்பூக்கமாக, உருவத்தோடு கூடியதாக மாற்று நபர் ஒருவரைத் தேடுவார்கள். அவர்களுக்கு இயேசுவையோ முஹம்மதையோவிட வேறு நல்ல மாற்று நபர் யார் கிடைக்கமுடியும்? இதன் மூலம், உருவமுடைய கடவுள் அதுகாறும் அனுபவித்திருந்த முக்கியத்துவத்தை, இவ்விரு தீர்க்கதரிசிகளும் மேற்கொள்ளலாம். அதே சமயம், அவர்களுக்கும் கடவுளென்ற கருத்துப்படிவம் தேவைப்பட்டது; ஏனெனில் அவரைக் கொல்லைப்புறத்தில் ஒளித்துவைத்துவிட்டுப், பின்பற்றுவோர் எனும் பலன்களைத் தாம் அனுபவிக்கமுடியும்.

தற்போது இவ்விருவரும் தம் கல்லறைகளுக்குள்ளிருந்து, உலகத்தைத் தாம் ஏமாற்றியது, அந்தத் தூண்டிற்புழுவுக்கு மனித அறிவிலிகள் சிக்கியது என்பது பற்றியெண்ணி வேடிக்கையாக நகைத்துக்கொண்டிருப்பார்கள்!

## உருவமுடைய கடவுள் உருவமின்மையையும் உருவமற்றகடவுள் உருவத்தையும். தம்முள்ளே கொண்டவர்கள்

யாரேனுமொருவரை உங்கள் முகத்தோடும், வேறொருவரை என் முகத்தோடும் படைக்கக்கூடிய கடவுள், தன்னையே ஒருயானையின் முகத்தோடு - கிறித்துவ உலகம், யானை முகங்கொண்ட இந்துக் கடவுள் எனக்கூறும் - கூடப்படைத்துக்கொள்ள முடியுமென்று எப்போதாவது உங்களுக்குத் தோன்றியிருக்கிறதா? அவரால் அவ்விதம் செய்ய முடியாதென்று நீங்கள் நினைக்கிறீர்களா? குறிப்பிட்ட உருவமேதுமற்ற ஆகாயத்தை, குறிப்பிட்டவடிவமேதுமில்லாத காற்றைப் படைக்கக்கூடியவர், எவ்வித உருவமுமில்லாமலேயே தன்னையும் ஆக்கிக்கொள்ள முடியுமென்பது உங்களுக்குத் தோன்றியதுண்டா?

அவரைச் 'சக்தி' யென்று ஏன் நீங்கள் நினைக்கவேண்டும்? சார்பியல் கோட்பாட்டை ஐன்ஸ்டீன் பிரபலப்படுத்தி, இந்து ஆன்மீகத்துறை சார்ந்த ஒவ்வொரு பண்டிதரும், நவீன விஞ்ஞானம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பதற்காக நு=அஉ$^{2}$ என்று மேற்கோள் காட்டுவதற்காகவா? அல்லது, அறிவியல் புனைகதைகள் அக்கருத்தைப் பிரபலமாக்கி, அது உடனடியாகப் பொது மக்களின் ஏற்பைப் பெறுமென்பதாலா? அல்லது, உங்களுக்குக் கடவுள் எதைப்போலிருப்பாரென்பது தெரியாததால், அவரை வர்ணிக்காமல் விடுவது அல்லது, நிரூபிக்குமாறு உங்களை யாரும் கேட்காதவாறு, அவரைப் பிரிந்துகொள்ள வியலாத முறையில் வர்ணிப்பது என்பதற்காகவா? கடவுளை-அது சக்தியோ அல்லது வேறெதோ-ஏதோவொரு விதமான தோற்றத்தில் நீங்கள் ஏன் அடக்கி வைக்கவேண்டும்?

இந்த எளிய விஷயத்தைப் புரிந்து கொள்ளுங்கள் : பல்வேறு உருவங்களையும், உருவமின்மைகளையும் படைக்கவல்ல ஒருவர், தனக்கே எவ்வித உருவத்தையோ, உருவமின்மையையோ உண்டாக்கிக் கொள்ளமுடியும். இந்த எளிமையான விளக்கத்தைப் புரிந்துகொள்ள உங்களுக்கு மிகப்பரந்த அளவிலான புத்திகூர்மை தேவையா?

## எப்போதைக்கும் விவாதம்

கேள்வி : கடவுளுக்கு உருவமில்லையென்கிறீர்கள்; அதுஉங்களுக்கு எப்படித்தெரியும்?

விடை : கடவுளைப் பற்றிய நேரடி அனுபவம் எனக்குண்டு; அவருக்கு உருவமில்லையென்பது எனக்கு நன்கு தெரியும்.

கே. : உங்களுக்குக் கடவுளின் நேரடி அனுபவமுண்டென்று எவ்வாறு நீங்கள் நினைக்கிறீர்கள்?

வி : என் வார்த்தையை நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

கே : சரி, அவரை எப்படி அடையாளங் கண்டீர்கள்?

வி : ஒளியைப்போலத், தூய்மையான சக்தி போலிருந்தார்

கே : அது அவர்தானென்று அத்தனை நிச்சயமாக உங்களுக்கெப்படித் தெரியும்?

வி : நிச்சயமாகத் தெரியும்

கே : அவரை ஒளியாகக்காண நீங்கள் விரும்பினீர்களா? அதனால் ஒளியாகக் காட்சி தந்தாரா?

வி : அல்ல. அவர் ஒளியாகவிருப்பதால், தன்னை ஒளியாகக் காட்டினார்.

கே : அவர் ஒளிபோல் இருக்கிறாரென்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?

வி : எனக்குத் தெரியும்.

கே : அவர் ஒளிபோல் இருக்கிறாரென்பதை நான் எவ்வாறு அறியமுடியும்?

வி : என்னுடைய நிலைக்கு நீங்கள் உயர்ந்தால், அது இயலும்.

கே : உங்கள் நிலையென்ன?

வி : அதை அடையும்போது உங்களுக்குத் தெரியும்.

## லிட்மஸ் சோதனை

கே : கடவுளுக்கு உருவமுண்டு என்கிறீர்கள். சரி. அது எப்படி உங்களுக்குத் தெரியும்?

வி : நான் அவரைக் கண்டேன்.

கே : அவர் எதைப் போலிருந்தார்?

வி : இச்சரீரத்தைவிடுமுன், என் வாழ்க்கையில் ஒரே ஆசை

கே : அது என்ன?

வி : என் புலன்களின் செயற்பாட்டோடு அவரைக் காணவேண்டுமென்பதே.

கே : கண்டீர்களா?

வி : கண்டேன்

கே : அது அவர்தானென்று எவ்வாறு அடையாளங்கண்டீர்கள்?

வி : அவரை ஸ்ரீ நாராயணனாகக் காணவேண்டுமென்றே எப்போதும் விரும்பினேன்.

கே : அவ்வாறு கண்டீர்களா?

வி : ஆம்! கண்டேன்.

## உருவமற்ற கடவுளை நீங்கள் வழிபடுவதைக் காட்டிலும் எளிதாக அவரோடு உறவுகொள்ள விக்கிரற வழிபாடு எவ்வாறு உதவுகிறது

மற்றெல்லாவற்றையும் விடுத்துக், கடவுளிடம் அன்பு கொள்வது, கடவுளை அடைவதற்கு முக்கியமான செயற்பாடாகும். எவ்வாறாயினும், மற்ற அனைத்தையும் ஒதுக்கிவிட்டுக் கடவுளிடம் அன்பு கொள்வதென்பது எளிதான காரியமல்ல; ஆகையால் கடவுளிடம் அன்பு வைப்பதென்பதே தொடக்கத்தில் போதுமானது.

கடவுளை எவ்வாறு நேசிப்பதென்பது கேள்வி. இதைப் புரிந்துகொள்ளுவதற்கு எளிதாக, நம் குழந்தையை நாம் நேசிப்பதென்ற ஒப்புவமைக்கு மீண்டும் செல்லுவோம்.

உங்கள் குழந்தைக்கு ஒருமுகமும் உடலுமுள்ளன. அந்த முகம், உடலோடு உங்களை உறவுபடுத்திக்கொள்ள முடிகிறது. குழந்தையின் ஆன்மாவோடுந்தான் உறவு கொள்ளுகிறீர்கள். ஆயினும், அறியுணர்வு நிலையில் குழந்தையின் முகத்தோடும் உடலோடுமான அளவில் அல்ல. முகம் என்பது முக்கியமானது. முகமில்லாத வெறும் உடலோடு மட்டும் அக்குழந்தையிடம் நீங்கள் உறவு கொள்ளமுடிவதில்லை. முகமில்லாதவொரு குழந்தையை, அதன் உடலைமட்டும் உங்களிடம் கொண்டுவந்து, “இது உங்கள் குழந்தை, வைத்துக்கொள்ளுங்கள், அன்பு செய்யுங்கள், பராமரியுங்கள்,” என்று சொல்லுவதாக வைத்துக்கொண்டால், நீங்கள் அதை அடையாளம் காணமுடியாமல் எப்படி உணர்வீர்கள்? கடவுளை நேசிப்பதும் இதைப்போலத்தான். ஒரு முகமும் ஒரு உடலும் உங்களுக்குத் தேவை; அதிலும் முகம் முக்கியம். ஏனெனில் அதுதான் உங்களுக்குள்ளே உணர்வுகளை உண்டாக்குகிறது. அவலட்சணமான அல்லது கோரமான முகம்வேறுவிதமான உணர்வுகளை உங்களிடம் எழுப்புகிறது; அன்பு தவழும் முகம் அந்தப்பொருளின் மீது மிக வேறான உணர்வுகளை எழுப்பும். இங்கே அப்படிப்பட்ட பொருளே கடவுள்.

உங்கள் குழந்தை வெறும் காற்றாக விருப்பதாக வைத்துக்கொண்டால், அப்போது எவ்விதம் உணர்வீர்கள்? உங்கள் குழந்தை ஒரு ஒளிக்கற்றையாக மட்டும் இப்பதாக வைத்துக்கொண்டால், அப்போது எவ்விதம் உணர்வீர்கள்? நீங்கள் அன்பு செலுத்துவது உங்கள் இதயத்தால்தானேயன்றித் தலையால் அல்ல. ஒரு குழந்தையையோ அல்லது கடவுளையோ நேசிப்பதற்கு உங்கள் இதயம் தேவைப்படுகிறது. வெறும் காற்றாக அல்லது ஒளிக்கற்றையாக உருவமற்றகடவுளை அக்காட்சியாகக்காணும்போது, அங்குள்ள வெற்றிடத்தை நிரப்புவனவே விக்கிரஹங்கள். விக்கிரஹங்களின் மூலம், உங்கள் அன்புக்குரியவொன்றுக்கு-இங்கே, கடவுளுக்கு ஒரு உடலை, மிகமுக்கியமாக ஒருமுகத்தைத்தருகிறீர்கள். எண்ணிறந்த முகவடிவங்களுடன் கூடிய எண்ணிறந்த விக்கிரஹங்கள், இந்தப்படைப்பின் வாயிலாகக் கடவுள், தன்னை எண்ணிறந்த வழிகளில் புலப்படுத்திக் கொள்ளுகிறார் என்பதையே குறிக்கின்றன.

பிரபஞ்சம் என்று நாம் கூறும் சீலையின் ஓவியர் கடவுள். உங்களைச் சுற்றியுள்ள அதிசயிக்கும்படியான அழகு வகைகளைக் காணுங்கள். அருவருப்புத்தோற்றத்தை நீங்கள் அறிந்துணருகையில் ஏற்படும் முறைப்பான முரண்பாட்டைப்பாருங்கள். இது அழகின் மற்றொரு வகை - அதாவது, எதிரான வகை. உங்களைச் சுற்றிலுமிருக்கும் கொடூரத்தின் பல்வேறு வகைகளையும், அன்பின் பல்வேறு சாயல்களையும் பாருங்கள். இவ்வித எதிரிடைப் பண்புக்கூறுகள் யாவும் இந்தப் படைப்பின் ஒரு பகுதியேயாகும். இந்தப் பண்புக்கூறுகள் அனைத்தையும் உருவாக்கியவொன்றைத்தான் நாம் கடவுள் என்கிறோம். எனவே, கடவுளை வெவ்வேறான வடிவங்களில் சித்தரிப்பதிலே தவறென்ன? மனிதன், கடவுளைப் போலவே ஒரு ஓவியன். எனவே, அவன் கடவுளை வெவ்வேறான வடிவங்களில் சித்தரிக்க முயலுகிறான்.

கடவுளுடைய வெவ்வேறு அம்சங்களின் மிக நீண்ட வரிசை, தேர்வு செய்யப்படுவதற்காக உங்கள் முன்பாகவிருக்கையில், நீங்கள் எளிதில் உறவு கொள்ளக்கூடியவொன்றைத் தேர்வு செய்வது எளிது. அந்தத் தேர்வு பெரும்பாலும் உங்கள் அகத்தின் தன்மையைப் பொறுத்தது.

வாழ்க்கையின் இந்த எளிய உண்மையை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு விக்கிரஹத்திலுள்ள முகமும் உடலும், கடவுளின் அம்சங்களில் ஒன்றோடு உங்களை உறவுபடுத்திக்கொள்ள உதவுகிறது. இந்த உண்மையை நீங்கள் அலட்சியப்படுத்தினால், அது உங்கள் சொந்தப் பாதகத்துக்குத்தான்.

ஒரு விக்கிரஹமானது, இயேசு, முஹம்மது அல்லது ஒரு குரு போன்ற எந்த இடையீட்டாளரின் சேவையுமில்லாமல் கடவுளோடு நேரடியாக உங்களை உறவுகொள்ள உதவுகிறது.

இறுதிப் பகுப்பாய்வின்படி, இயேசுவோ, முஹம்மதோ அல்லது குருவோ கடவுளை நீங்கள் அடைவதற்கு உதவவியலாதவர்கள். கூடுமானால், அதிகபட்சமாக முறையே அவரவர் முத்திரைக்குரிய கடவுளுக்கு உங்களைத் தயார்படுத்தலாம்.

அவனிடம் நீங்கள் கொள்ளுகின்ற பக்திக்கு மகிழ்ந்து உங்கள் கருவாக ஆகி, இறுதியாகத் தன்னை நெருங்கும் பாதையை உங்களுக்குக் காட்டவல்லவன் ஈஸ்வரன்.

குருர் ப்ரஹ்மா குருர்விஷ்ணு : குருதேவோ மஹேஸ்வர : !
குருஸ்ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம: !!
பிரம்மம் - பரமாத்மா; பிரம்மன் - படைப்புத்தொழிலாளி;

விஷ்ணு - காப்பவனாகிய பிரம்மம்; மஹேஸ்வரன் - அழிப்பவனாகிய பிரம்மம்-இன்னொரு படைப்புக்கு வழிவகுப்பதாக அனைத்தையும் கரைத்து முடிப்பவன்.

எல்லையன்றவொன்று பற்றிய, என் எல்லைக்குட்பட்ட
விளக்கம் இதுவே. அவனே என் குரு. அவனே
என் அகத்தூண்டுதலுக்கான ஆதாரம்.

# வாணிபமுத்திரை 'அ'வுள்ள கடவுள்; வாணிபமுத்திரை 'ஆ' உள்ள கடவுள்; வாணிபமுத்திரையே இல்லாத கடவுள்

## *ஒரு கடவுளை-அதாவது, குறிப்பிட்டவொரு வாணிபமுத்திரை யுடைய கடவுளைப்பின்பற்றுகையில் நேருவதென்ன?*

பிற மக்களுடைய கடவுளரிடத்தில் உங்களுக்குச் சகிப்புத்தன்மை இல்லை; உங்கள் கடவுள் ஒன்று மட்டுமே கடவுள்; அதுவே உண்மையான கடவுளென்று எண்ணுகிறீர்கள். கடவுளைச் சிறிதும் அறியாமல், ஆனால் அதிகமாக அறிந்ததைப் போல், இப்படியொரு முட்டாள்தனமான கருத்தோடு நீங்கள் வாழ்கிறீர்கள்.

கிறித்தவர்கள் ஒரு கடவுளை - அது கிறித்தவக்கடவுள் மட்டுமே - நம்பியதால் அவர்கள், பல கடவுளரை நம்பிய எல்லா நாகரீகங்களையும் ஒழித்தார்கள். ஆனால், இஸ்லாமை மட்டும் அவ்வாறு செய்யவில்லை. காரணம், காரணம், அவர்களைப் போலவே இஸ்லாமும் ஒரே கடவுளை நம்பியதுதான். ஆயினும். இஸ்லாமின் ஒரேகடவுள், தம்முடைய கடவுளிலிருந்து வேறுபட்டதால், கிறித்தவர்கள் தொடர்ந்து இஸ்லாமியருடன் போரிட்டு வந்தார்கள்.

இன்று ஒஸாமா பின் லேடனுக்கும் ஜனாதிபதி புஷ்ஷுக்குமிடையே நடந்துவருவது ஜெஹாத் மற்றும் சமயப்போரேயன்றி வேறில்லை. கிறித்தவர்கள் அதைச் சமயப்போரென்று கூறுவதில்லை. ஏனெனில், அவர்களுடைய உண்மையான உள்நோக்கங் களை மறைத்துக்கொள்ளத், தம்மைப் பழக்கிக்கொண்டுவிட்டார்கள். வார்த்தைகள் கூறுவதொன்று; ஆனால், அவர்களுடைய செய்கைகள் வேறென்றே வெளிப்படுத்துகின்றன. (குறிப்பு : ஸெப்டம்பர் 11 நிகழ்வுக்குப்பின் உடனே புஷ், சமயப்போர் என்பது பற்றிச் சொல்லிவிட்டு, மிகவேகமாக அச்சொல்லைப் பின்வாங்கிக்கொண்டார்.)

எவ்வாறாயினும் அவர்கள் இந்து நாகரிகத்தை ஒழிக்க முடியவில்லை. ஆனால், அவர்கள், ஆறு தலைமுறைகளாக ஆங்கிலக் கல்வியைத் திணித்துக், கணிசமான அளவில் அதைச் சீர்குலைத்தார்கள்; இந்துச்சமுதாயத்தின் இழைமானத்தை வன்மையாக அழித்திருக் கிறார்கள்.

கிறித்துவ விவிலியத்தைக் காண நான் தொடங்கியபோது, இந்துக்களைப் போன்ற விக்கிரஹ வழிபாட்டாளர்களுக்கு அது மரணத்தை விதிப்பதறிந்தேன். அதனால்தான், அகதிகளாக வந்த ஸிரியக்கிறித்தவர்கள், ஆயிராமாண்டுகள் காத்திருந்து, இந்து விருந்தோம்பலில் வாழ்ந்து, கடைசியில், வாஸ்கோதகாமா பாரத தேசத்துக்குத், தம் கப்பல்களோடும், பீரங்கிகளோடும் வந்து சேர்ந்தபோது, அவரை அவர்கள் அணுகி, இந்து அரசனுக்கெதிராகப் போர் தொடுக்குமாறு

மன்றாடினார்கள். கிறித்தவரிடம் நீங்கள் ஒருபோதும் எதிர்பார்க்கக்கூடாதவொன்று ராஜ விசுவாசம்.

“பல்வேறு மானியங்கள் கிறித்தவர்களுக்கு அளிக்கப்பட்டதற்கான சமகாலத்திய ஐந்து செப்பேடுகள் இம்முறை கிடைத்துள்ளன-ஸி.பி.ஃபர்த்” C B Firth quoted in Myth of St Thomas, p 47

“அவர்கள் தம்மை யாவரென்று தெரிவித்துக்கொண்டு, தமது பழமையான சிறப்புகளையும் ஆவணங்களையும் அவரிடம் ஒப்புவித்துத், தமது இந்து அரசனோடு போரிடுமாறு அழைத்தனர்.” Ishwar Sharan, Myth of St Thomas, p 64

“அவர்கள், அவருக்கு ஒரு ‘நீதித்தண்ட’த்தைப் பரிசளித்துப், போர்த்துக்கீசிய அரசனுக்குத் தமது பற்றுறுதியை வ்ாக்களித்தார்கள் ஜார்ஜ் மேனசேரி” George Menachery quoted in Myth of St Thomas, p 64

“இதற்கும் மேலாக அவர்கள், வாஸ்கோதகாமாவிடம், தங்கள் உதவியுடன் அவர் இந்து ராஜ்ஜியங்களை வெல்லவேண்டுமென யோசனை கூறி, இந்த நோக்கத்துக்காகக், கிராங்கனூரில் ஒரு கோட்டையைக் கட்டுமாறு அழைத்தனர். இந்துஅரசர்கள் தம்மைத்தாராள மனப்பான்மையுடனும் அன்போடும் நடத்தியதற்குக், கிறித்தவர்களின் கைம்மாறு இதுவே-கே. எம். பணிக்கர்” K M Panikkar quoted in Myth of St Thomas, p 65

பாரசீக அரசன், இரண்டாம் ஷாபூர், கிறித்தவர்கள் தன்னுடைய நாட்டுக்குத் தேவையற்ற சுமையென்று கருதினான். அது சரியே. இந்து அரசர்கள், தம் நாட்டின் விருந்தினராக அவர்களை நடத்தினர்; ஆனால், விருந்தினரோ தம் ஓம்புனருக்கு-ஆயிரமாண்டுகள் விருந்-தோம்பலுக்குப்பின் - நம்பிக்கைத்துரோகம் செய்துவிட்டனர். கிறித்துவம், கிறித்தவர்களை எவ்விதம் ஆக்கியதென்பதற்குக் கிறித்துவத்தின் சரித்திரமே சாட்சி.

“கருத்துப்பாங்கின் அடிப்படையில், மனித இனத்தை நண்பனாகவும் விரோதியாகவும் பிரிக்கும் ஒரு பூதத்தை வளர்க்கும் தமது கிறித்துவச் சமயத்தின் அவசரத்தேவைகளின்பேரில் ஸிரியர்கள் நடந்து கொண்டார்கள். நான்காம் நூற்றாண்டில், அரசன் இரண்டாம் ஷாபூர், தன் கிறித்தவப் பிரஜைகளுக்கிருந்த பற்றுறுதிகளைப்பற்றித் தவறாக எண்ணி விடவில்லை. Ishwar Sharan, Myth of St Thomas, p 65

புனிதஃபிரான்ஸிஸ் ஸேவியர், தேவாலயங்கள் கட்டுவதற்காக இந்து அரசனிடமிருந்து ஏராளமான நன்கொடைகள் பெற்று, அந்தக்கிராமங்களிலிருந்த அனைவரையும் ஒரே மூச்சில் மதம் மாற்றி, இந்துக்கோவில்களை இடித்துத்தள்ளி, இந்துக்கடவுளரின் விக்கிரஹங்களையழித்து, இவையெல்லாம் நிகழ்ந்ததைக் கண்ணுற்ற போது, தான் பெற்ற மகிழ்ச்சியை வார்த்தைகளால் வருணிக்கமுடியாதென்று இயேசு கழகத்துக்கு எழுதினார்.

## *ஸேவியர், இயேசு கழகத்துக்கு ஒரு கடிதம் எழுதினார்*

“ஞானஸ்நானங்களுக்குப்பிறகு, புதுக்கிறித்தவர்கள் தம் வீடுகளுக்குச் சென்று, மீண்டும் தம் மனைவியரோடும், குடும்பத்தாருடனும், அவர்களுக்கும் ஞானஸ்நானம் செய்விக்கத் தயாராகத் திரும்பிவந்தார்கள். அவர்கள் யாவரும் ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டபின், எல்லா

இடங்களிலுமுள்ள பொய்க்கடவுளரின் கோவில்களை இடிக்குமாறும், சிலைகளை உடைக்குமாறும் உத்திரவிட்டேன். தாம் ஏற்கெனவே வழிபட்ட அந்தக் கோவில்களும் சிலைகளும் அதே மக்கள் கைகளால் உடைக்கப்பட்ட காட்சியைக்கண்டு நான் அடைந்த மகிழ்ச்சியை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது’. கொல்லத்து அரசன், தேவாலயங்களைக் கட்டுவதற்காக ஸேவியருக்கு மிகப்பெரிய அளவில் நிதியுதவி அளித்தபின் ஸேவியர் அதைச் செய்தார்-ஸீதாராம் கோயல்” Sita Ram Goel quoted in Myth of St Thomas, p 80

அவருடைய நடவடிக்கைகள், கிறித்துவத்திலொரு புனிதராக ஸேவியரைச் செய்தன. அப்படிப்பட்டவர்கள் இந்துக்களால் வெறுக்கப்பட்டிருப்பார்கள். இவ்விரு மதங்களுமே, தம் பயன்மதிப்பு அமைப்பில் மிகவும் எதிரிடையானவை; ஆனால், இந்து ஆசான்களும் போதகர்களும் அதைக் காணத் தவறுகின்றனர். அது அறியாமையாலா அல்லது வசதிக்காகவா அல்லது தம்மையே ஏமாற்றிக்கொள்ளுவதான பெருந்தன்மையா என்று நான் அதிசயிக்கிறேன். தம் முன்பாக முறைத்துப் பார்த்துக்கொண்டிருக்கும் உண்மையைக் காணாமல், தமது முகங்களை அவர்கள் திருப்பிக் கொள்ளச் செய்வது என்னவென்பதை அவர்கள்தாம் கூறவேண்டுமென்பது என் ஊகம். அவர்களைக்கேட்கும் துணிவு உங்களுக்கிருந்தால், ஒவ்வொரு போதகரும, வெவ்வேறு சாக்குப்போக்கை உங்களுக்குச் சொல்லக்கூடும்.

## *தமது சொந்த முத்திரை கொண்ட கடவுளை மேம்படுத்தும் முயற்சியில் அவர்கள் ரத்தவெறி கொள்வோராகின்றனர்*

யூதம், கிறித்துவம், இஸ்லாம் ஆகியவற்றின் போதனைகள், அவற்றைப் பின்பற்றுவோரை ரத்தத்தாகங் கொண்ட மிருகங்களைக் காட்டிலும் மோசமாக மாற்றுகின்றன. தமக்குப் பசியெடுக்கையிலோ அல்லது தற்காப்புக்காகவோதான் மிருகங்கள் தாக்குகின்றன என்று அறியப்படுகிறது. ஆனால், இம்மூன்று மதங்களைப் பின்பற்றும் மனிதர்களோ, அவற்றையெல்லாம் விஞ்சுகின்றனர். பிறருடைய ரத்தத்தைத் தேட, அவர்கள் எரிச்சலூட்டப்பட வேண்டுமென்ற அவசியமில்லை. அவர்களுக்கு ரத்தத்தின் மீது வெறும் விருப்பம். ரத்தத்தைத் தவிர வேறெதுவும் அவர்களுடைய தாகத்தைத் தணிவிக்காது. அவர்களுக்கு அது முடிவற்ற ஆசை. இதனால், சிலைவழிபாட்டாளர்களின் உதிரத்தை உறிஞ்சப், போதுமான அகத்தூண்டுதல் குறையுமபோது, தமது உதிரச் சகோதரர்களின் ரத்தத்தைப் பெறுவதில் அவர்கள் உல்லாசமாகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளுகிறார்கள். அப்போது அவர்கள், தாமெல்லோரும் ஆபிரஹாம் என்ற ஒரே தந்தையைக் கொண்ட உறவினர்கள் என்பதை மறக்கிறார்கள். ரத்த உறவு முக்கியமல்ல; ரத்த உறிஞ்சலே முன்னுரிமை கொள்ளுகிறது. இன்றைய செய்தித்தாளினின்றும், இங்கொன்றும் அங்கொன்றுமா எடுக்கப்பட்ட சில மாதிரிகள் இதோ, நீங்கள் எதைத் தேடுகிறீர்களென்பதை அறிவீர்களானால், இதுபோன்ற ஏராளமான மாதிரிகள், தினசரிச் செய்தித்தாள்களில் கிடைக்கும்.

## இஸ்லாமுக்கு எதிராக இஸ்லாம்

“தற்கொலைக் குண்டு வெடிப்புக்குப்பின், பாகிஸ்தான் நகரில் பரவியிருக்கும் கலகம். ஸியால்கோட் : முப்பது பேரைக்கொன்ற ஒரு தற்கொலைக் குண்டு வெடிப்பில் இறந்தோரின் இறுதி ஊர்வலத்துக்குப்பின்பு, கோபங்கொண்ட ஷீயாமுஸ்லீம்கள், பாகிஸ்தானின் கிழக்குப்புற நகரமான ஸியால் கோட்டில், சனிக் கிழமையன்று, வாகனங்களையும், பெருநகரத்தலைவரின் அலுவலகத்தையும் தீக்கிரையாக்கினரென்று, ராய்டரின் செய்தி தெரிவிக்கிறது.” The Free Press Journal, Mumbai, 3-10-2004

இந்தத் தற்கொலைக் குண்டு வெடித்தவர்கள் யார்? தாக்கப்பட்டோரின சொந்த உதிரச்சகோரர்களான முஸ்லீம்கள்தாம் அவர்கள்; ஆனால் ஸுன்னி முஸ்லீம்கள். ஆகையால், வாடிக்கையான ரத்தக்குளியல், அவர்களுடைய விருப்பமான பொழுதுபோக்கு. பாதிக்க வேறெவரும் இல்லையென்னும்போது, அவர்கள், இதில் அவ்வப்போது ஈடுபட வேண்டும். இதுவொன்றும் புதிதல்ல..

“1994 முதல் அக்டோபர் 2001 வரை, ஆஃப்கனிஸ்தானில், தாலிபன் ஆட்சி நடந்தபோது, குறிப்பாக, 1996 ஸெப்டம்பரில் காபூல் கைப்பற்றப்பட்டபின், அல்காய்தா மற்றும் லஷ்கர்-எ-ஜங்வியைச் சேர்ந்த ஸுன்னி முஸ்லீம்கள் (ஹஸரா குடியினத்தைச் சேர்ந்த) ஷீயா முஸ்லீம்களைப் பெருமளவில் படுகொலை செய்தார்கள்.” Organizer, 28-9-2004, p 17, பி. ராமன்

## இஸ்லாமு யூதமும்

“இஸ்ரவேலரின் கடுந்தாக்குதல்களைத் தொடர்ந்து பாலஸ்தீனம் அவசரகால நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்துகிறது. ஜெருஸலேம். இஸ்ரேல் பாதுகாப்புப் படையினரின் சமீபத்திய கடுந்தாக்குதலால் பாலஸ்தீனர்கள் 50 பேர் இறந்து, நூற்றுக்கு மேற்பட்டோர் படுகாயமுற்றனர். இதனால், பாலஸ்தீனம் ஆட்சி அவசரகால நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளாதப் பி.டி.ஐ. செய்தி தெரிவிக்கிறது. பாலஸ்தீனத் தலைமை, ரமல்லாவிலுள்ள யாஸர் அரஃபத்தின் தலைமைச் செயலகத்தில் அவசரக்கூட்டமொன்றை நடத்தியது. பாலஸ்தீன ஆட்சித்தலைவர், தம் மக்களின் மீது இஸ்ரேல் நடத்திய ‘நேர்மைக் கேடான கொடுங்குற்றமான மனிதத் தாக்குதல்’களுக்கு உடனடியாக முடிவுகட்ட வேண்டுமென்றார். இந்த இனவேறுபாட்டுணர்ச்சி கொண்டதும் கொடுங்குற்றமானதுமான தாக்குதல்களை நிறுத்த, உடனடியாகச் செயல்படுமாறு உலகம் முழுவதையும் நான் அழைக்கிறேன் என்றார் அவர்.” The Free Press Journal, மும்பை, 3-10-2004

தமக்கு ஊறு நேரும்போது அவர்கள் கூக்குரலிடுகிறார்கள். அப்போது மட்டும் இது நேர்மைக்கேடானதாக, இனவேறு பாட்டுஉணர்ச்சிகொண்ட, மனிதத்தன்மையற்றதுமாக ஆகி, இவ்விஷயத்தில் உலகம் முழுவதும் உடனடியாகத் தலையிடவேண்டும். காஷ்மீரத்தில் இந்துக்களை முஸ்லீம்கள் கொல்லும்போது அந்தக்குரல் எங்கே போயிற்று? இது மட்டும் அல்லாவின் கட்டளை. மேற்கு நெகேவ் பிரதேசம், நஹல் ஒஸ் பகுதிக்கருகில், காஸாவிலுள்ள இஸ்ரேலின் எல்லைப்பாதுகாப்பு வேலியைக் கடும்பனியில் கடந்தது, தமது ஆட்கள் தாம்

என்பதையும், அதற்குப் பழி தீர்க்கவே இஸ்ரேலர் இந்தத் தாக்குதலை நடத்தினர் என்பதையும் மட்டும், 1994இல் நொபேல் அமைதிப் பரிசைப்பெற்ற அரஃபத் ஏன் கூறவில்லை? நன்னெறி என்ற முறை பிறருக்குத்தான்; தாம் கடைப்பிடிப்பதற்காக அல்ல! மீண்டும் இங்கே, அதே ஆபிரஹாமின் வழித்தோன்றல்களாக, உதிரச்சகோதரர்களாக இருக்கும் யூதர்களும் முஸ்லீம்களும், ஒருவருடைய ரத்தத்தை மற்றவர் உறிஞ்சுவதற்குச் சச்சரவில் ஈடுபட்டிருப்பதைக் காண்கிறோம். வாடிக்கையான ரத்தக்குளியல் அவர்களுடைய பொழுதுபோக்கு என்பதை இன்னுமா நீங்கள் சந்தேகிக்க முடியும்?

## *கடவுளைக் கடைச்சரக்காக ஆக்கக், குறிப்பிட்ட வாணிய முத்திரையற்ற பலகடவுளரை நீங்கள் பின்பற்றுவதில் நேருவதென்ன?*

பிற மக்களின் கடவுளரிடம் நீங்கள் சகிப்புத்தன்மையுடையவராக ஆகிறீர்கள். வேறு கடவுளை நம்புவோரோடும் நீங்கள் நட்பிணக்கத்தோடு வாழ்கிறீர்கள்; கடவுளர் வேறுபட்டோரா என்பது முக்கியமல்ல; நீங்கள் யாரை வழிபடுகிறீர்கள் என்று கடவுளுக்குத் தெரியும் என்பதுதான் முக்கியம். எந்தவிதமாக நீங்கள் அவரை அறிந்துணர்கிறீர்களென்பதை விலக்குங்கள்.

## *இந்துக்கள் பல கடவுளரை, உருவமுடைய கடவுளை ஏன் நம்புகிறார்கள்?*

இந்துக்கள் பல கடவுளரிடம் நம்பிக்கை கொள்ளுகிறார்கள். ஏனெனில், அசாதாரணமானதும், பல்வேறு வகைப்பட்டதுமான இந்தப் பிரபஞ்சத்தைப் படைக்கக்கூடிய கடவுள், தனக்கு விருப்பமான எந்த உருவையும் எளிதில் ஏற்றுக்கொள்ளவியலும். ஒருவடிவத்தைக் கொள்ளுவது அல்லது கொள்ளாதிருப்பதில் அவருக்கு எவ்வித நிர்ப்பந்தமும் கிடையாது. அவர், தான் விரும்பும் விதத்தில் எத்தனை வடிவங்களோடு வேண்டுமானாலும் காட்சிதர முடியும்.

மனிதர்களை, மிருகங்களை, பறவைகளை, மீன்களை, மரங்களை-எதுதான் இல்லை-அனைத்தையும் அவர்தான் படைத்தார். உங்களைச் சுற்றிலும் பாருங்கள், தெரியும். பிறகு உங்களிடமே ஒரு எளிய கேள்வியைக் கேட்டுக் கொள்ளுங்கள் : ஏராளமான வடிவங்களை உண்டாக்கவல்ல ஒருவர், அந்தக் குறிப்பிட்ட வடிவத்தைத் தானே எடுத்துக்கொள்ள முடியாதா? தன் பக்தர்கள் எந்தவடிவில் தன்னைக்காண விரும்புகிறார்களோ அந்த ஏதோவொரு வடிவமெடுக்க முடியாதா? தன் பக்தனுடைய பக்தியின் தன்மைக்கு அவர் மகிழ்ந்தாரானால், அந்தப் பக்தன் தேர்வு செய்யும் வடிவத்தில் அவனுக்குக் காட்சிதர அவருக்கு இயலாதா?

யாரோவொருவர் முன்வைத்தவாதம் : (1) இந்துக்கள் பல கடவுளரில் நம்பிக்கையுள்ளவர்கள் அல்ல; (2) ஒரே கடவுளின் பல காட்சி வடிவங்களில் இந்துக்கள் நம்பிக்கை வைக்கிறார்கள்; (3) பல கடவுளரை இந்துக்கள் வழிபடுகிறார்களென்பது ஒரு மேற்கத்திய கருத்துப்பாங்கு. இதையெல்லாம் சிலர் புரிந்துகொள்வது நல்லது. உலகின் மற்ற மக்களெல்லாம் இந்துக்கள் பல கடவுளரை வழிபடுவதாகவே நினைக்கிறார்கள்; ஏன், பல இந்துக்களுக்கே கூட இதே விதமான

கருத்துண்டு. பெரும்பாலானோர் எண்ணுவதே இந்நாளில் உண்மையாகவிருக்கிறது. நான் அந்தத் தொடர்பிலும் மொழியிலும்தான் எழுதுகிறேன்.

## அப்படிப்பட்ட நம்பிக்கையின் பலன் என்ன?

பல கடவுளரை இந்துவானவன் வழிபடுவதால், அவன், இந்துக்கடவுள், முஸ்லீம் கடவுள், கிறித்துவக்கடவுள் என்றெல்லாம் சண்டையிடுவதில்லை. அவனுக்கு ஆயிரம் கடவுளர் இருப்பதால், ஒன்று கூடுவதிலோ, குறைவதிலோ அவனிடம் வித்தியாசம் உண்டாவதில்லை. அதனால்தான் (பாரசீக அரசன், இரண்டாம் ஷாபூர், கிறித்தவர்களை நாட்டின் பெருஞ்சுமையென்று கருதி விடாத்துயரளித்தபோது ஓடி), 345ஆம் ஆண்டில், பாரத தேசத்தின், கேரள மாநிலத்துக் கிராங்கனூரில் அகதிகளாக வந்தபோது, இந்து அரசன் அவர்கள் வசிக்க மட்டுமல்லாது, அவர்கள் தம் சொந்தச் சமயத்தைச் சுதந்திரமாக அனுசரிக்கும் பொருட்டுத் தேவாலயம் கட்டுவதற்கும் இடம் அளித்தான். அதேபோலக் குஜராத்தில் அரசன், ஸித்தராஜா ஜயசிங்கும், அவனுக்குப் பின்வந்த ஆட்சியாளர்களும் வணிகத்துக்காக வந்து தங்கிய முஸ்லீம்களுக்கு, அவர்கள் தம்முடைய சொந்தச் சமயத்தைச் சுதந்திரமாக அனுசரிக்கும் பொருட்டுப் பள்ளிவாசல்களைக் கட்டுவதற்கு வாய்ப்பளித்தார். கல்வெட்டுச் சாசனங்கள் சாட்சியம் கூறும் விதமாக, இவையெல்லாம் 1299இல் உலூக் கானின் படையெடுப்பால் குஜராத்தில் முஸ்லீம்களின் ஆட்சி ஏற்படுவதற்கு முன்னர் நடந்தவை.

“முஸ்லீம்களுக்கும் அவர்களுடைய வழிபாட்டுத் தலங்களுக்கும். (இந்து) அரசனான ஸித்தராஜா ஜய்சிங் அளித்துவந்த பாதுகாப்பு, அம்மன்னனின் பின்வந்தோரிடமும் குஜராத்தில் தொடர்ந்தது. ஏராளமான கல்வெட்டுக்கள் - குறிப்பாகக், கம்பாட், ஜுனாகர், ப்ரபாஸ் பாடன் ஆகிய இடங்களிலுள்ளவை - தெரிவிக்கும் விதமாகக், கி.பி. 1299இல் உலூக்கான் படையெடுப்புக்குப்பின் குஜராத்தின் ஆட்சி முஸ்லீம்களிடம் மாறியதற்கு முன்பாக, அம்மாநிலத்தின் பல்வேறு நகரங்களில் முஸ்லீம் ஜனத்தொகையும், அவர்களுடைய வழிபாட்டுத்தலங்களும் பெருகத்தொடங்கின. இந்த ‘வணிகர்கள், வியாபாரிகள், கடலாண்மையாளர்கள் மற்றும் சமயப்பரப்பாளர்களுக்கு’, இந்து ஆட்சியின் கீழ் தாமிருந்த சூழலில் திருப்தியில்லையென்றே தோன்றுகிறது. (தங்கள் சமயம் அவர்களிடம் கட்டாயப்படுத்தும் காரணத்தால், முஸ்லீம்கள் யாரோடு சண்டையிடக் கடமைப்பட்டிருக்கிறார்களோ) அந்தப் புறச்சமயிகளின் (பாரத தேசத்தைப் பொறுத்தவரை இந்துக்களின்) நாடாகிய குஜராத் (நம்பிக்கையாளர்களின், அதாவது முஸ்லீம்களின்) நாடாக மாறும் நாளை எதிர்பார்த்துக்கொண்டேயிருந்தார்கள்.” ஸீதாராம் கோயல் பாகம் What happened to Hindu Temples Vol 2, ப.35-36

# இந்துமதம்

## அதே கடவுள் அல்ல

யூதத்திலும் கிறித்துவத்திலும் கடவுள் பற்றியும் இஸ்லாமிய அல்லாஹ் பற்றியுமுள்ள கருத்துப்பாங்கிலிருந்து, இந்து மதத்தின் பகவான் அல்லது ஈஸ்வரன் பற்றிய கருத்துப்பாங்கு வேறுபட்டது.

யூதர், கிறித்துவரின் கடவுளும் இஸ்லாமின் அல்லாவும், இந்துமதக் கடவுளிடம் வன்மம் நிறைந்த கடவுளராயுள்ளனர். மாறாக, இந்துமதக்கடவுளோ, வேறெந்த மதத்துக் கடவுளானாலும் நிறைந்த அன்பு கொண்டவர். அவர்கள் எல்லோருமே முக்கியமாக ஒரே கடவுள் அல்ல. இந்தக் கடவுளர் யாவரும் ஒன்றே; மக்கள்தாம் வெவ்வேறு முறையில் அவரை அறிந்துணருகிறார்களென்றவொரு வாதத்தை யாரோ முன்வைத்தார். இவ்வாறான புலனுணர்வுகள்தாம் அவர்களுடைய எண்ணங்களையும் செயல்களையும் வடிவமைக்கின்றனவென்பதை மறந்துவிடாதீர்கள். புலனுணர்வுகள் இந்த விதத்தில் உண்மையாகிப்போய்விடுகின்றன. அந்த மெய்ம்மைகளைப்பற்றி நான் விளக்குகிறேன்.

## கிறித்துவ உலகம் வெறுப்புடன் நோக்கும் இந்துப் பயன்மதிப்புகள் இவை

"அவர்களுடைய இலக்கியங்கள் ஒரு கோடியிலிருந்து மறுகோடிவரை-அன்பின் வெளிப்பாடுகளும், உண்மைக்குப் பெருமதிப்பும் நிறைந்துள்ளன." India, What.... மாக்ஸ்ம்யுல்லர் ப.59

செய்தி : கீழேநீங்கள் காண்பவை விதிவிலக்கல்ல; உருமாதிரிகள்.

"*பகவத்கீதா 4:11, 9:29* - எவரெவர் எந்தெந்தப் பாதையின் மூலம் என்னை நெருங்குகிறாரோ, அவரவரைக் கடைத்தேற்ற நான் ஏற்கிறேன். பெரிய அல்லது சிறிய எல்லாப் படைப்புயிர்களுக்கும் நான் பொதுவானவன்; எவரையும் நான் வெறுப்பதில்லை; சலுகைக்குரியவர் எவரும் எனக்கில்லை; பிற கடவுளரைப் பக்தியோடுவழிபடுவோர், என்னை வழிபடுகிறார்கள்" A HIndu View... ப.27

செய்தி : ஈஸ்வரன் எவரையும் வெறுப்பதில்லை; சலுகைக்குரியவராக எவரும் அவருக்கில்லை.

"*ருக்வேதம் 1.164.46* - அண்டத்தின் மெய்ம்மை ஒன்றே; அறிவுடையோர் அதை, இந்திரன், மித்ரன், வருணன் அக்னி, பெரும் கருத்மன், யமன், சுவாசத்தையளிக்கும் மாதரிஸ்வன் என்றெல்லாம் பல்வேறு விதங்களில் உணருகிறார்கள்" A HIndu View... ப.22

“*சிவ மஹிம்னாஸ்தோத்ரம் 3* - நேராகவும், வளைந்து நெளிந்தும் எண்ணிறந்த நதிகள், வெவ்வேறு பாதைகளில் பாய்ந்து, அதே கடலில் கலக்கின்றன. அதேபோல், வெவ்வேறு சுவைகளையும் திறமைகளையும் விழைபவர்கள், முயற்சியால் உன்னை அடைகிறார்கள்.” A HIndu View.. ப.27

செய்தி : வெவ்வேறு பாதைகள் கடவுளிடம் இட்டுச் செல்லுகின்றன. பிற மக்களின் கடவுளரை மதிக்க வேண்டுமென்று இது நமக்குத் கற்பிக்கிறது.

ஒரு விஷயம் பற்றி இங்கே நீங்கள் தெளிவாயிருத்தல் அவசியம். பண்டைய ரிஷிகள், கடவுளுக்கும் மனிதனுக்குமான ஒரே இடையீட்டாளர் என்றெல்லாம் கூறும் அசுரச்சமயங்களைப் பற்றிப் பேசியவர்கள் அல்ல.

இன்று ஏராளமான இந்து இடையீட்டாளர்கள் உள்ளனர். அவர்கள் இயேசுவை மேன்மைப்படுத்தி, அதே சமயம், இந்துக்களில் தம்மைப்பின்பற்றுவோரிடம், கடவுளுக்கும் மனிதனுக்கும் நடுவே நேர் உரிமையுள்ள இடையீட்டாளர்கள் தாமும் எனக்கூறுகிறார்கள். இந்த இந்துக் கடவுள்-மனிதர்கள்’, தம்மைப் பின்பற்றும் இந்துக்களிடம், தாம் எந்த இயேசுவை மேன்மைப்படுத்துகிறார்களோ, அந்த இயேசு, தம்மை இந்துக்களின் சார்பிலான நேர் உரிமை இடையீட்டாளர்களாக அங்கீகரிக்கவில்லையென்ற உண்மையை மறைத்துவிடுகிறார்கள். இயேசுவோ இந்த விஷயத்தில் மிகத்தெளிவாயிருக்கிறார். பிற மக்களின் கடைத்தேற்றத்துக்காக - அதுவும் அவர்களில் முதலில் கிறித்தவராக ஆனால் மட்டும் - கடவுளிடம் கலந்துரையாடுவதற்கான நேர் உரிமையைப் பெற்றவர் தானொருவர் மட்டுமே என்கிறார்.

இந்த இந்து இடையீட்டாளர்கள், கிறித்தவராக மாற அஞ்சுகின்றனர். இந்து அறக்கொடைகளின் மீது எழுப்பப்பெற்றுள்ள தமது மெத்தென்ற சொகுசுச்சூழலிலிருந்து உதைத்து விரட்டப்படுவோமென்கிற பயமே காரணம். எனவே அவர்கள் இயேசுவைப் புகழ்ந்து இந்துக்களை ஏமாற்றுகிறார்கள். கிறித்துவச் சமயப் பிரசார அமைப்பிலிருந்து வியாபார தந்திரங்களை அவர்களை கற்றிருக்கிறார்கள். உலகம் முழுவதும் சுற்றியவர்களாகையால், இன்றைய கட்டத்தில் எது நன்கு வேலை செய்ய வல்லதென்பதை அறிந்து கொண்டிருப்பவர்கள் ஆயிற்றே!

“*ருக்வேதம் 1.89.1* - எல்லாத்திசைகளிலிருந்தும் இன்னயமார்ந்த எண்ணங்கள் எமக்குவரட்டும்.” A HIndu View… ப.26

“*ருக்வேதம் 3.62.10* - காயத்ரீ மந்திரம் - எங்கள் புத்திக்கு அகத்தூண்டல் அளிக்கும் தெய்வீக ஒளியின் மிக உச்சமான பேராற்றலுக்கு வணக்கஞ் செலுத்துகிறேன்.” A HIndu View… ப.24

செய்தி : நம் மனங்களை மூடிக்கொள்ளவேண்டாம்; அறிவு எல்லாத்திசைகளிலிருந்தும் எங்களிடம் வந்து, எங்கள் புத்திக்கு அகத்தூண்டல் உண்டாக்கட்டும்.

“*தைத்திரீயோபநிஷத்-ப்ரஹ்மவல்லி மற்றும் ப்ருருவல்லி-சாந்தி மந்திரம்* - ஆண்டவன் நம்மை ஒன்றாகக் காப்பாற்றட்டும்; அவர் நமமை ஒன்றாகப் போஷிக்கட்டும்; நம் வலிமையை ஒன்று கூட்டி, மனித இனத்தின் நன்மைக்காக நாம் பணிபுரிவோம். எங்கள் கல்வி பிரகாசமானதாயும்,

பயனுள்ளதாகவுமிருக்கட்டும். நாம் ஒருவரையொருவர் வெறுக்காதிருப்போமாக; சாந்தி, சாந்தி, முழுமையான சாந்தி எங்கும் நிலவுவதாக". Chants of India

"*தைத்திரீய ஆரண்யகம், 4ஆவது ப்ரச்னம், ப்ரவர்க்ய மந்த்ரம், 42ஆவது அனுவாகம்* - பூமியில் சாந்தி நிலவுவதாக; விசும்பில் சாந்தி நிலவுவதாக; சொர்க்கத்தில் சாந்தி நிலவுவதாக; திசைகளெங்கும் சாந்தி நிலவுவதாக; தீயில் சாந்தி நிலவுவதாக; காற்றில் சாந்தி நிலவுவதாக; சூரியனில் சாந்தி நிலவுவதாக; சுந்திரனில் நிலவுவதாக; விண்மீன் குழுவில் சாந்தி நிலவுவதாக; ஜலங்களில் சாந்தி நிலவுவதாக; செடிகளிலும் மூலிகைகளிலும் சாந்தி நிலவுவதாக; பசுக்களிடம் சாந்தி நிலவுவதாக; ஆடுகளிடம் சாந்தி நிலவுவதாக; குதிரைகளிடம் சாந்தி நிலவுவதாக; மனித இனத்திடம் சாந்தி நிலவுவதாக; பரப்ரஹ்மத்தில் சாந்தி நிலவுவதாக; பிரஹ்மத்தை எய்தியவர்களிடம் சாந்தி நிலவுவதாக; சாந்தி நிலவுவதாக; சாந்தி மட்டுமே நிலவுவதாக; என்னுள் சாந்தி நிலவுவதாக; சாந்தி மட்டுமே; இந்தச் சாந்தியின் மூலம் என்னுள்ளும், இருகால் மற்றும் நான்கு கால் பிராணிகளிடத்தும் சாந்தியை நான் உறுதிப்படுத்துவேனாக. என்னுள் அமைதி, அமைதி மட்டுமே நிலவட்டும்." Chants of India

